# இணுவில் ஒலி

Inuvil Oli

இரு திங்கள் ஏடு 7

## இலண்டன்

### சிறப்பிதழ்




புரட்டாதி – ஐப்பசி 2013

விலை ரூபா 50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WEKANDE CILNIC

**ESTD 1990**

## DISPENSARY & SURGERY

**SPECIAL CLINICS**

- ★ DIABETIC CLINIC
- ★ SKIN CLINIC
- ★ WOMEN DISEASES CLINIC
- ★ DIETARY CONSULTATION
- ★ HERBAL MEDICINE

**LABORATORY INVESTIGATIONS (NAWALOKA METROPOLIS)**

HAKEEM AHAMED HERBALS

HAH

CHAIRMAN : **DR. A.L.K THASSIM**
(Thassim Ahamed)
Family Physician,
Private Medical Practitioner
Regd No: 6671 - (General - SLIMC)

**NO. 09, SAUNDER'S COURT,**
**COLOMBO 02 . SRI LANKA**

Tel :011 2438801 Mobile :077 966 4063, 071 843 0715
Fax : 011 2307762 Email: doctorthassim@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

# 'இணுவில் ஒலி'

(தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இருதிங்கள் ஏடு)

வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி - ஐப்பசி 2013 வில் - 2 ஒலி - 7

**நிறுவுனர்/காப்பாளர்**
நடராசா சச்சிதானந்தன்

**ஆசிரியர்:**
த.சிவசுப்பிரமணியம் ( தம்பு சிவா )
தொ.பேசி : 0718676482

**நிர்வாக ஆசிரியர்:**
சிவலிங்கம் சரவணபவன்
தொ.பேசி: 077 3126802

**சஞ்சிகைக் குழு :**
மூ.சிவலிங்கம் | அ.குகதாசன்
கா.வைத்தீஸ்வரன் | ம.காண்டீபன்
பேராசிரியர் க.தேவராஜா | செ.ஹரிசங்கர்
க.பரமேஸ்வரன் | தே.சதீசன்
சு.சண்முககுமார் | பி.அஜந்தன்
மா.ந.பரமேஸ்வரன் | யோ.சுதந்திரன்
சு.பரமேஸ்வரலிங்கம்
திருமதி வை.கணேசபிள்ளை
க.கண்ணபிரான்
திருமதி க.கிருஸ்ணபிள்ளை

**வெளிநாட்டுப் பிரதிநிதிகள்:**
கனடா : ம.இராஜகுலசூரியர்
இலண்டன் : சபேசன் சண்முகநாதன்
அமெரிக்கா : வே.பிரேமதயாளன்
அவுஸ்திரேலியா : தி.திருநந்தகுமார்
ஜேர்மனி : ஆனந்தவடிவரசன்
டென்மார்க் : கனேசு பரமநாதன்
சுவிஸ் : நடராஜா மனோகரன்
நோர்வே : நல்லையா சண்முகப்பிரபு

**தொடர்பு :**
9 -2/1, நெல்சன் இடம்,
கொழும்பு – 06, இலங்கை.
தொ.பேசி : 0114902406

47, கருணாகரப்பிள்ளையார் கோவில் வீதி,
இளந்தாரி கோவிலடி, இணுவில் கிழக்கு,
சுன்னாகம், இலங்கை.

**E-Mail : inuviloli@hotmail.com**

படைப்புகளுக்குப் படைப்பாளிகளே பொறுப்புடையவர்கள். ஆக்கங்கள் செம்மை பார்த்தபின் பிரசுரமாகும்.
–ஆசிரியர்–

## உள்ளே ஒலிப்பவை

| | பக்கம் |
|---|---|
| பேனா முனையிலிருந்து..... | 02 |
| ஓராண்டு நிறைவின் மகிழ்ச்சி | 03 |
| **கட்டுரை :** | |
| ● பிறந்த மண் பெருமை | 04 |
| ● 85 ஆகிய அன்பு நண்பரை அணைக்கின்றேன். | 07 |
| ● ஆழ நுழைந்தும் அகல விரிந்தும் இயக்கும் சக்தி | 16 |
| ● வறுமையும் கல்வியும் தீர்வும் | 23 |
| **இலக்கியம் :** | |
| ● தமிழ் இலக்கியப் பரப்பில் திறனாய்வு நோக்கு | 11 |
| **கவிதை :** | |
| ● கண்ணனைத்தேடி | 14 |
| ● முடிவு காண்போம் | 20 |
| **அறிமுகம் :** | |
| ● கனடாவில் எங்கள் ஆனந்தர் சுப்பிரமணியம் | 15 |
| **சிறுகதை :** | |
| ● 'பூப்பம் பறிப்பும்' | 29 |
| **அறிந்தவையும் தெரிந்தவையும் :** | 21 |
| **மாணவர் உலகம் :** | |
| ● தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சி | 26 |
| ● இயற்கையில் அன்பு | 27 |
| ● சுவாமி விபுலானந்த அடிகள் | 28 |
| **உங்கள் விருந்து** | 36 |
| **இலண்டன் நிகழ்வுகள்:** | |
| ● வசந்தகால விழாவும் சிறுவர் விளையாட்டுப் போட்டியும் | 35 |
| ● அனாமிகா அஞ்சலியும் கலை இலக்கிய சங்கம நிகழ்வும் | 35 |
| **அறிவியல் :** | |
| ● எய்ட்ஸ் நோயைத் தடுக்க புதிய முயற்சி | 39 |
| **ஏனையவை :** | |
| ● இங்கிலாந்து மகாராணி 'எலிசபெத்' | 10 |
| ● கேள்விப்பட்டதைச் சொல்ல வந்தோம் | 19 |
| ● கட்டுரைப் போட்டி முடிவுகள் | 34 |
| ● ஈழத்துச் சிறுவர் இலக்கியம் | 37 |

அட்டையில் இலண்டன் மாநகரின் எழில்மிகு தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேனா முனையிலிருந்து.....

"தன்னைத்தான் காதலன் ஆயின், எனைத்து ஒன்றும்
துன்னற்க, தீவினைப் பால்" (- குறள் 209)

(உனக்கு உன்மேல் காதல் இருப்பது உண்மையானால், எத்துணைச் சிறிய அளவிலும் தீமையைச் செய்யாதே)

வாழவேண்டிய பச்சிளம் பாலகர்கள் பெற்றவர்களால் பரிதாபமாக நீர்நிலைகளுக்குள் எறியப்பட்டு கொலை செய்யப்படும் நிலை அண்மைக் காலமாக அதிகரித்து வருவது பெரும் கவலை அளிக்கும் சம்பவங்களாகும். அதேவேளை அக்கொலையைச் செய்த தாயோ தந்தையோ தற்கொலை முயற்சியில் அதே நீர்நிலைக்குள் விழுந்தும் உள்ளார்கள். சிலர் காப்பாற்றப்பட்டுள்ளனர்; சிலர் உயிர் நீத்துள்ளார்கள். மனோநிலை பாதிக்கப்பட்ட நிலையிலும், வறுமை, குடும்பப் பிரச்சனை காரணமாகவும் இத்தகைய தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெறுவதாக வைத்தியர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். மேலும் கணவன்மார்களால் ஒதுக்கிவிடப்பட்ட பெண்கள் வாழ்வதற்கு முடியாத நிலை ஏற்படும் போது பிள்ளைகளையும் கொன்று தாமும் தற்கொலை செய்ய முற்படுகின்றனர். மனஅழுத்தமே இத்தகைய ஒரு விபரீத முடிவினை எடுப்பதற்குத் தூண்டுகோலாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. 'நல்லதங்காள்' கதையையும் விஞ்சிவிடும் அளவுக்கு, உலகத்தையே அறியாத பச்சிளம் சிறார்கள் பெற்றவர்களால் கொடூரமாக அழிக்கப்படுகின்றார்கள். இவ்விடயத்தில் வடக்கும் கிழக்கும்தான் முன்னிலையில் இருப்பதாகத் தொலைக்காட்சி, வானொலி, செய்திப் பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிந்துள்ளது.

மேலும் சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வல்லுறவுகள் என்பனவும் இளம்பராயத்தினரை மோசமான பாதிப்புக்கு உட்படுத்தி வருகின்றன. வறுமை காரணமாக விபச்சார நடவடிக்கைகளும் ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றன. இவற்றுக்கான அடிப்படைக் காரணங்களை நோக்குவோமாகில் 'வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தியே' முக்கிய காரணமாகக் கொண்டாலும், குடும்பத்தை வழிநடத்தும் தலைவனதும் அக்கறையின்மை, தனிமை காரணமாக எதிர்காலம் சூனியமாகத் தெரிவது, அன்றாட உணவுக்கே வழியில்லாத ஏழ்மை நிலை, 'உலகத்திலே பயங்கரமான ஆயுதம் - நிலைகெட்டுப்போன நயவஞ்சகரின் நாக்கு' என்று சொல்லப்படுகின்றவர்களின் ஏளனம், புறங்கூறல், பழிகூறல், தூற்றுதல் போன்றவற்றால் ஏற்படும் மனஉளைச்சல் உட்பட இன்னும் தனிப்பட்ட காரணங்களும் தற்கொலை முயற்சிகளுக்கு பின்னணியில் அமைந்துள்ளன.

பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உளவள ஆலோசகனைகளை வழங்கி அவர்களை நன்நிலைப்படுத்துவதன் மூலம் ஓரளவுக்கு தற்கொலை முயற்சிகளைத் தடுக்கலாம் என மனநலவைத்தியர்கள் கூறியுள்ளனர். எப்படி இருந்தபோதிலும் சிறப்பான வாழ்வுக்கான அடித்தளம் இடப்படும்வரை இதே நிலை தொடருவதை முற்றுமுழுதாகத் தடுத்துவிட முடியாது. முயற்சித்தால் முடியாதது என்று ஒன்றுமில்லை.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

- ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓராண்டு நிறைவின் மகிழ்ச்சியில் 'இணுவில் ஒலி'

இணுவில் ஒலியின் வாசகப் பெருமக்களே, மாணவச் செல்வங்களே, விளம்பரங்கள் தந்துதவிய தொழில் அதிபர்களே, அன்பளிப்பு வழங்கிய செம்மல்களே, எழுத்தாக்கங் களைத் தந்துதவிய படைப்பாளிகளே மற்றும் பல வகையிலும் உதவியும் ஒத்துழைப்பும் நல்கிக் கொண்டிருக்கின்ற அன்பு நெஞ்சங்களே உங்கள் அனைவருக்கும் முதற்கண் எமது நன்றியுடனான வணக்கத்தைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இருதிங்கள் ஏடான 'இணுவில் ஒலி' எம்மவர் களின் பாரம்பரிய பண்பாட்டு, கலாசாரங்களைப் பேணுவதுடன், எமது கலைப்பொக்கி ஷங்களின் சிறப்பினையும், மூதாதையரின் பெருமையினையும் வருங்கால சமுதாயம் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடனும், பழந் தமிழ் கலை இலக்கியங் களுடன் நவீன இலக்கியப் பரம்பலை விரிவாக்கும் எண்ணத்துடனும், எமது மாணவச் செல்வங்களை ஊக்குவித்து அவர்களின் வாசிப்பு, எழுத்தாக்கம் ஆகிய துறைகளில் முன் னேற்றகரமான வகிபாகத்தை உருவாக்கும் முனைப்புடனும் செயற்பட சங்கற்பம்பூண்டு பணியாற்றி வருவதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள்.

இத்தகைய பணியை முன்னெடுப்பதற்கு முன்னின்று ஆக்கபூர்வமான ஆதரவினை வழங்கி வருகின்ற இலண்டன் இணுவில் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் உயர்திரு. நடராசா சச்சிதானந்தனுக்கும், அவர்தம் குழாத்தினருக்கும் நன்றி உரித்தாகுக. மேலும் கனடா திருவூர் ஒன்றியத்தைச் சேர்ந்த திரு. ம.இராஜகுலசூரியர், அமெரிக்காவில் வதியும் திரு.வே.பிரேமதயாளன் வவுனியூர் இரா.உதயணன், இலக்கிய ஊக்குவிப்பாளர் திருமலை பாலா (லண்டன்) உட்பட வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் எமது நன்றிகள். அத்துடன் இணுவில் ஒலியின் வளர்ச்சிக்காகப் பல வகையிலும் உழைத்துக் கொண்டிருக்கின்ற நிர்வாக ஆசிரியர் உட்பட சஞ்சிகைக்குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம். மேலும் அவ்வப்போது ஆக்கபூர்வமான அறிவுரைகளை நல்கிக்கொண்டிருக்கின்ற பெரியோர்களுக்கும், சஞ்சிகையை அழகுறப் பதிப்பித்துத்தரும் பதிப்பகத்தாருக்கும் எமது நன்றி.

'இணுவில் ஒலி' இரண்டாவது வருடத்தில் தடம்பதித்துள்ளது. தொடர்ந்தும் அதன் பணியை முன்னெடுக்க உங்கள் ஒவ்வொருவருடைய மனப்பூர்வமான ஆதரவினை பணி வன்புடன் வேண்டிநிற்கின்றோம்.

நன்றி

வணக்கம்

**'இணுவில் ஒலி'**
**சஞ்சிகையாளர்கள்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

# பிறந்த மண் பெருமை கொள்ள பெருமை சேர்த்த பெருந்தகை

**முதுபெரும் புலவர், கலாபூஷணம், புலவர்மணி ஆசிரியர் வை.க.சிற்றம்பலம் அவர்கள்**



செந்தமிழும், சீர்சைவமும் இரு கண்ணெனப் போற்றி வளர்த்த பேரறிஞர்களும், சைவச் சான்றோர்களும், சித்தர்களும், ஞானிகளும் வாழ்ந்த சீர் இணுவைத் திருவூரின் கண் அருளாளர் வைத்திலிங்கம் கந்தர் – ஆனந்திப்பிள்ளைக்கும் மகனாக 16.09.1914 இல் சிற்றம்பலம் அவர்கள் பிறந்தார்.

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃது இலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு அமைய புகழுடன் தமது 99 ஆவது அகவையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.

"விளையும் பயிரை முளையில் தெரியும்" என்ற முதுமொழிக்கு அமைவாக, இவர் பிறந்து அறிவு தெரிந்த நாள் முதல் கலைத் தெய்வத்தின் மீது பக்தி நிரம்பப் பெற்றவராக இருந்தார். தமது ஆரம்பக் கல்வியை இணுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் மேற்கொண்டார். மூன்றாம் வகுப்பு வரை கல்வி கற்ற பின் கோண்டாவில் சைவ வித்தியாசாலையில் சேர்ந்து (1925 – 1930) எல்லா வகுப்புகளிலும் தேர்ச்சி பெற்று, அக்காலத்தில் உயர்ந்த வகுப்பாகிய ஒன்பதாம் (பிறிலிம்) வகுப்பில் சித்தியெய்தினார். பாடசாலைகளில் நடைபெறும் எழுத்து, பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றி முதல் இடத்தைப் பெற்றுக் கொள்வார். ஆசிரியர்களுடைய அன்பையும் ஆசிகளையும் பெற்று சிறந்த மாணவராக, சகலதுறை வல்லுனராகத் துலங்கி நன்மதிப்புடன் திகழ்ந்தார். 1930ஆம் ஆண்டு ஆரம்ப ஆசிரியராக இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலையில் இணைந்து குறைந்த வேதனத்துடன் சில காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். ஓய்வுநேரங்களில் இணுவைத் தவமுனிவர் வடிவேல் சுவாமிகளிடம் சென்று திருமுறைகளும் புராண படனமும் பயின்று தமது சமய அறிவைப் பெருக்கிக்கொண்டார்.

1933 இல் இளைஞரான சிற்றம்பலத்துக்கு திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் ஆசிரிய பயிற்சி மாணவனாகக் கற்கும் வாய்ப்புக் கிட்டியது. சைவாசிரிய கலாசாலைப் பிரவேசம் சிற்றம்பலம் அவர்களுக்கு புதிய அறிவையும் அனுபவங்களையும் ஊட்டியது. கலாசாலை அதிபரின் ஆற்றல்மிக்க ஆளுமை மற்றும் உப அதிபரின் ஆழ்ந்த சிந்தனைப் புலம், விரிவுரையாற்றியோரின் விளக்கச் செறிவு ஆகியன அவரைப் புடம்போட்ட தங்கமாக மிளிரச் செய்தன. ஆறுமுகநாவலர் பெருமானின் வழிநின்று சைவத்துக்கும் தமிழுக்கும் பெரும் பணியாற்றிய பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் மாணாக்கராக இருந்து அவரின் வழிகாட்டலில் தமிழ் மொழியிலும் சைவ சமயத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் ஆற்றல் பெற்றவராகத் திகழ்ந்தார்.

"வெள்ளத்து அனைய மலர் நீட்டம்
மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு"

நீரின் உயரம் உயர உயர மலரும் உயரும். அதேபோல் தமது ஊக்கத்தால் உயர்ந்து நிற்கும் மலராக நின்று மணம் பரப்புகின்றார். இதையே ஔவையாரும் "நீரளவே ஆகுமாம் நீராம்பல்" என்று கூறியுள்ளார்.

1934 ஆம் ஆண்டு ஆசிரியப் பயிற்சியை நிறைவுசெய்து கொண்டு வெளியேறிய சிற்றம்பலம் அவர்கள், ஆசிரியத் தொழிலைப் பெரும் பேறாக எண்ணி, 1935 தொடக்கம் 1970 வரை ஆசிரியராகவே இருந்து நல்மாணாக்கர் பரம்பரையை உருவாக்கி மகிழ்ந்தார். 1937இல் தென்னிந்திய தமிழ்ச்சங்கம் நடத்திய இளந்தமிழ்ப் புலவர் தேர்வில் சித்திடைந்தார். 1939 இல் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம் நடத்திய பாலபண்டிதர் தேர்விலும் சித்தி யெய்தினார். படிப்பிலும், தேர்விலும் முன் னேற்றங்களைக் கண்ட சிற்றம்பலம் அவர்கள் ஆசிரிய சேவையில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். அதனால் சைவ வித்தியா விருத்திச் சங்க முகாமையின் கீழ் இயங்கிய சைவப் பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றது. 1943 தொடக்கம் 1946 வரை மதுரைப் பண்டிதர் பரீட்சை, வித்துவான் பரீட்சைக்கு ஆயத்தஞ் செய்துகொண்டிருந்த இறுதிக் காலம். அதாவது பரீட்சை நடைபெறவுள்ள காலகட்டத்தில் மனைவியார் காலமானதால் பரீட்சையில் தோற்ற முடியாமல் போயிற்று.

கவிபாடும் வல்லமை கொண்டு விளங்கிய இவர் 1945இல் யாழ்ப்பாணம் செங்குந்தா இந்துக் கல்லூரியின் அதிபராகச் சேவையாற்றி மாற்றலாகிச் சென்ற அ.த. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளைக்குப் பாடிய பிரிவுபசாரப் பாடலைத் தொடர்ந்து வாரந்தோறும் 'ஈழநாடு' பத்திரிகையில் பலவித மரபுச் செய்யுள்களை எழுதி வந்தார். 1968 தொடக்கம் இலங்கை வானொலியில் நற்சிந்தனைகளை வழங்கியும் வந்துள்ளார்.

ஆசிரியப் பணியிலிருந்து 1970 இல் ஓய்வுபெற்ற சிற்றம்பலம் அவர்கள் ஓய்வு காலத்தை எழுத்துப் பணிக்கு அர்ப்பணித்தார். தெய்வ சிந்தனையில் மனதைச் செலுத்தி, வணங்கும் தெய்வங்கள் மீது பாமாலைகளைப் புனைந்து, தாம் அவற்றைப் பலரும் உணர்ந்து கொள்ளும் வண்ணம் பல்வேறு சந்தர்ப்பங்களில் நூல்களாக வெளிக் கொணர்ந்தார்.

1986 இல் அளவெட்டி 'கும்பழாவளைப் பிள்ளையார் நான்மணிமாலை'யை ஆலயத்திலேயே அரங்கேற்றம் செய்தார். தொடர்ந்து பல பிரபந்தங்களைப் பாடிவரலானார். 1992 இல் இவரால் எழுதப்பட்ட 'விபுலானந்த நான்மணிமாலை' நூல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முதல் பரிசைப் பெற்றுக் கொண்டது. 1994 இல் இலங்கையில் வெளிவந்த மரபுக்கவிதை நூல்களில் இவரால் இயற்றப்பட்ட 'நல்லூர் முருகன் இறைமணிமாலை' கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முதல் பரிசினைப் பெற்றது. இந்த நூலின் அரங்கேற்றம் நல்லை ஆதீனத்தில் நடைபெற்றமை விசேட அம்சமாகும். இவ்வாறாக பல பிரபந்தங்களைப் பாடியவர் தம் குருநாதரான பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை மேல் 'பண்டிதமணி' என்னும்பிரபந்தத்தையும்பாடி தமது நன்றிக் கடனைச் செலுத்தியுள்ளார்.

2004ஆம் ஆண்டு லண்டன் ஸ்ரீமுருகன் கோயில் கும்பாபிஷேகஞ் சார்பாக பதினாறு சீர்கொண்ட பன்னிரண்டு விருத்தப் பாக்களைப் பாடி வழங்கினார். மேலும் 'இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் மணிமாலை', 'இணுவில் சிவகாமிபிள்ளைத் தமிழ்', 'இணுவில் சிவகாமி அந்தாதி', ஈழத்துச் சிதம்பர திருப்பதிகம்', 'கீரிமலை நகுலேஸ்வர திருப்பதிகம்' என்பவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரால் பாடப்பட்ட முக்கிய பாடல்களில் சிலவாகும். 2009 இல் ' கொக்குவில் சந்திரசேகரப் பிள்ளையார் மும்மணிமாலை' என்னும் நூலையும் வெளியிட்டு, பலரின் பாராட்டுக்களைப் பெற்றார்.

தமிழ், சமயத் தொண்டுகளுடன் பொதுப் பணிகளிலும் கால்பதித்து அவற்றைச் சிறப்புடன் செய்து வந்தார். துர்க்கா தேவஸ்தானத்தில் தொடர்ச்சியாக எட்டு வருடங்கள் பன்னிரு திருமுறைகளை ஓதி வந்து மெய்யடியார்களின் அன்புக்குப் பாத்திரமானார். அளவெட்டி சைவ வாலிபர் சங்கத்தின் காரிதரிசியாகவும், தலைவராகவும் ஏறக்குறைய பத்து ஆண்டுகள் (1975 – 1986) பணி புரிந்தார். மேலும் வடிவேற் சுவாமிகள், மகாதேவ சுவாமிகள், யோகர் சுவாமிகள் ஆகியோருடன் 50 ஆண்டு காலத் தொடர்பினை ஏற்படுத்தியிருந்தமை அவருக்குக் கிடைத்த பேறாகவே கொள்ளலாம். தமது வாழ்க்கையை சமயத்தின் பால் திருப்பி ஆலயங்கள் தோறும் சென்று பஜனைகளைச் செய்துவந்தார். எல்லோராலும் மதிக்கப்பட்ட பெருமகனாக, ஆரவாரமின்றி அமைதியாக வாழ்பவர் என்ற பண்புக்கு உரியவரானார்.

இவர் பாடிய பாடல்களைப் பின்வருமாறு வகுத்துத் தந்துள்ளார் அமரர் கலாபூஷணம், பண்டிதர் சி.அப்புத்துரை அவர்கள். ஒருபா ஒருபது – 4, மும்மணிமாலை – 2, திருஊஞ்சல் – 5, திருப்பதிகம் – 9, வருக்கமாலை – 1, திருவிரட்டை மணிமாலை – 4, திருப்பள்ளி எழுச்சி – 1, பிள்ளைத் தமிழ் – 3 என்றவாறு சிற்றம்பலம் அவர்களின் படைப்புகள் பற்றி விளக்கியுள்ளார். இதுவரை இவர் பாடியவை பதின்மூன்று பிரபந்தங்கள் என்ற தகவலையும் முன்வைத்துள்ளார்.

இணுவையூரின் மைந்தன் உலகறிந்த பெருங்கலைஞர் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் முதன்முதலாக 'கலாபூஷணம்' விருதைப் பெற்று ஊருக்குப் பெருமை சேர்த்துத் தந்தார். அவருக்கு அடுத்து 2002 ஆம் ஆண்டு இலக்கியத் துறைக்காக புலவர்மணி வை.க.சிற்றம்பலம் அவர்கள் கலாபூஷணம் விருதினைப் பெற்றுக் கொண்டார். எழுத்துப் பணியில் தம்மை ஈடுபடுத்தி சைவமும் தமிழும் வளர்க்க அரும்பாடுபட்டு சேவையாற்றும் பெரியாரின் மூன்று மகன்மாரும் ஆசிரியப் பணியுடன் இசைத் தொண்டும் புரிந்துவருகின்றனர். அவர்களில் ஒருவராகிய சிவானந்தராசா அவர்கள் 2012 ஆம் ஆண்டுக்கான கலாபூஷணம் விருதினை இசைத் துறைக்காகப் பெற்று பெருமை சேர்த்துள்ளார்.

முதுமையிலும் இளைஞராக வாழ்ந்து கொண்டிருக்கும் செந்தமிழின் சுவைத் தேன், இன்னும் பேரும் புகழுடனும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ்ப் பணியாற்ற இறையருள் துணை நிற்பதாக,

**"ஒவ்வது அறிவது அறிந்து அதன்**
**கண்தங்கிச் செல்வார்க்குச்**
**செல்லாதது இல்"**

தம்மால் எவ்வளவு முடியும் என்பதை அறிந்து அதன் கண் மனம், மொழி, மெய்களை ஒருங்குவித்து ஆராய்ந்து செயல்படுவார்க்கு வெற்றி பெற இயலாதது எதுவுமில்லை. சிற்றம்பலம் அவர்கள் வெற்றி மேல் வெற்றி பெற்று அறிவுக் களஞ்சியமாகத் திகழ்கின்றார்.

**-த.சி.மணிமாறன்**

உசாத்துணை :


01. 'ஈழத்துத் தமிழ்ப்புலவர் வரலாறு' (மூன்றாம் பாகம்) கலாபூஷணம் பண்டிதர் சி.அப்புத்துரை.
02. 'நடராஜம்' (வ.நடராசா நூற்றாண்டு விழாமலர்) சோ.பரமசாமியின் – 'முதுபெரும்புலவர் வை.க.சிற்றம்பலம்' என்னும் கட்டுரை.
03. 'இணுவில் ஒலி' 4 ஆவது இதழ் – 'அரசு வழங்கிய கலாபூஷணம் விருது' மா.ந.பரமேஸ்வரனின் கட்டுரை.
04. அறிந்தவையும், தெரிந்தவையும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

# 85 ஆகிய அன்பு நண்பரை அணைக்கிறேன்



பொன். பாலா என்று எம்மால் ஆசையுடன் அழைக்கப்படும் எம் இனிய நண்பர்பொன்னையா பாலசுந்தரம் அவர்கள் 85 ஆகிவிட்டார்கள்.

பொன். பாலாவுக்கும் எனக்கும் நல்ல ஒற்றுமைகள் பல உண்டு. ஒன்று, நாம் இருவரும் தமிழ் கவிதையின் தாசர்கள். நாங்களும் கவிப்போம். எனது கவிதைகளை அவர் தன் இதயத்தினால் இமயத்தில் வைத்துப் பாராட்டுவார். நானும் அவரின் கவிதைகளை உடனுடன் மிகவும் மெச்சுவேன்.


இரண்டாவது, அவருக்கும் எனக்கும் பல பொது இளைய நண்பர்கள் இருக்கிறார்கள். சிலரின் பெயர்களை மட்டும் சொன்னால் மற்றையோர் பெருந்தன்மையாய் எமை மன்னிப்பர் என நான் நம்புகிறேன். லண்டன் 'புதினம்' பத்திரிகாசிரியர் ஈ.கே. ராஜகோபாலும் நானும் மைற் நிறுவனத் தலைவராக நான் யாழ் மாதிரிச்சந்தையைக் கட்டியகாலத்தில் "ஈழகேசரி"க்குப் பேட்டி காண வந்த நாள் தொடக்கம், இங்கு லண்டனிலும், கூட்டுப் பணிகள் செய்து வந்திருக்கிறோம். ஐ.தி.சம்பந்தன் இங்கிலாந்தில் பிடித்த நண்பர். அவர் லண்டன் 'சுடரொளி'யின் ஆசிரியராக இருந்தவர். நாம் மூவரும் வெவ்வேறு அளவுக்கு வாசகர்கள் கண்முன் காட்சியளித்தோம்.

ந.சச்சிதானந்தன் சைவசமயச் சம்மேளனங்களில் எம் இருவரையும் சம்பந்தப்படுத்தியவர். திரு.நா.சீவரத்தினம் தன் 'சிவயோகம்' கோவில் வெளியீடுகளில் பொன். பாலாவைத் தொகுப்பாசிரியராக்கி அவர் வெளியிட்ட நூல்களில் என்னை எழுதவைத்தவர். பூபாளராகங்கள் புகழ் மகாலிங்கம் சுதாகரன், சம்சார-சாகரத்துள் நீந்தத் தொடங்கு மட்டும் தனது பலவருட நிகழ்ச் சிகளில் எம் இருவரையும் பங்கு கொள்ள வைத்தார். த. சிறீகந்தராஜா தம் 'தமிழ் ஓலைகள்' மூலமும்; இவருடன் திருப்புகழ் தாசர் பெறியியலாளர் க.தியாகமூர்த்தி யும், பொன். பாலா 2007ல் வெளியிட்ட *'பிரித்தானியாவும் ஈழத்தமிழரும்'* எனும் நூலின் மூலமும் தொடர்பானோம். மறைந்த நீதிபதி கிருஷ்ணா வைகுந்தவாசனும் அவரின் மனைவியார் மகேஸ்வரி அம்மையாரும் நானும், வாசனின் 80ம்ஆண்டு நினைவு மலா மூலம் பொன். பாலாவுடன் இணைந்தோம்.

மூன்றாவது, குடும்பரகத் தொடர்புகள். பொன். பாலாவின் குருவாகிய மறைந்த கலையரசு சொர்ணலிங்கத்தின் மகள் வைத்திய நிபுணர் சாரதா ராஜசிம்மனும் என் மனைவி வைத்தியை சீதாதேவியும் ஒன்றாக இலங்கை வைத்தியக் கல்லூரியில் படிக்கும்போது பொன். பாலாவின் கொழும்பு வீட்டில் பலதடவை அறுசுவை விருந்துண்டு மகிழ்ந்து சென்றதாகப் பின்னர் அறிந்தேன்.

மேலும் அவரின் மூன்று மகள்மாரில் மூத்த, கிருபாவின் மனைவிக்கும், எம் மூத்த மகளுக்கும் 'உமா' என தசாப்தங்களின்முன் பெயரிட்டுள்ளோம்!

**- பேராசிரியர் கோபன் மகாதேவா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது, பொன். பாலா எம் ஹறோ வீட்டுக்கு முதலில்வந்த தினம் என் மனத் திரையில் தெரிகிறது. 2006ஆம் ஆண்டின் மழையும் குளிரும் சேர்ந்த இலையுதிர் காலக் கார்த்திகையின் அந்தக் கதையை, அவரே சொல்கிறார்:-

*"எனது படைப்பான 'பிரித்தானியாவும் ஈழத் தமிழரும்' என்னும் நூலைப் பூர்த்தி செய்திருந்த போது அதற்கு முகவுரை எழுதப் பொருத்தமானவர் பேராசிரியர் அவர்கள்தான் என்ற முடிவுக்கு வந்திருந்தேன். அதன்படி அவர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டபோது மிகுந்த ஆர்வத்துடன் சம்மதித்தது மட்டுமல்ல, நூலின் நகலுடன் தம்மை வந்து சந்திக்கும் படியும் கேட்டுக் கொண்டார்.*

*நூலை அவரின் கையில் ஒப்படைத்த நேரத்திலிருந்து பேராசிரியர் அவர்கள் என்னை உண்ணவும் விடவில்லை, உறங்கவும் விடவில்லை என்று கூறினால் அது மிகை படக் கூறுவதாக இருக்காது. ஒரு கட்டத்தில், நூலின்மீது அவர் எடுத்த ஆர்வமும் அக்கறையும், அப்புத்தகத்தைப் பேராசிரியர் எழுதுகிறாரா? அல்லது நான் தான் எழுதினேனா? என்ற தடுமாற்றம் எனக்கு ஏற்பட்டும் விட்டது.*

*அந்த நூலில் இடம் பெற்ற எல்லா விடயங்களையும்படித்து, திருத்தம் செய்து, சேர்க்க வேண்டிய ஒன்றிரண்டு புதிய அம்சங்களைச் சேர்த்து, நீக்க வேண்டியன வற்றை நீக்குவதற்கான தமது சிறந்த யோசனைகளையும் எனது கவனத்திற்கு, குறிப்பு வடிவில் ஒப்படைத்ததுடன், ஆங்கிலத்தில், விரிவான முகவுரையையும் எழுதி, ஒரு சிறந்த படைப்பாக்கிய பெருமைக்கு உரியவர் பேராசிரியர்"* என்பதைப் பொன். பாலாவும் எம் நாலுகிட்டிய நண்பரும் கூடி 2009ல் தொகுத்தளித்த என் '75ஆவது அகவை நிறைவு மலரில்' பதிவு செய்துள்ளார்.

இலங்கையின் முன்னணி பத்திரிகையாளராக 50-வருடத்துக்கு தொழில் செய்து, 1983ல் இவரின்வீடு அரசியல் வன்முறையான விஷமிகளால் தீயில் சாம்பராக்கப்பட்டபின், பல ஆண்டுகள் தமிழ்நாட்டில் வாழ்ந்து, தன்தொழில் தொடர்ந்து, புதியநண்பர் பலரைத்தேடி, பின் பிரித்தானியாவுக்குக் குடியேறி, தெரிந்தெடுத்த தன் துறையில் இங்கும்விடாது, அணிகலனாக விளங்குகிறார். 'சுதந்திரன்', 'வீரகேசரி', தினகரன், 'சிலோன்டெயிலிநியூஸ்', 'சுடரொளி' போன்ற பத்திரிகைகளின் ஆசிரியக் குழுக்களின் சிறந்த, சிரேஷ்ட ஊடகவியலாளர். திறமையான பேட்டியாளர். ஆழ்ந்த சிந்தனையாளர். பிரவாகப் பேச்சாளர்.

இவரைப் பார்த்தால் வயது 85 என்று ஒருவரும் சொல்லார். எனினும் அடக்கமாக, 'கூரம்பாயினும் வீரியம் பேசேல்' எனும் கொள்கையுடன் எவரையும் மதித்து 'ஐயா' என்று அன்பும் மரியாதையுடனும் பேசி ஒன்றுகூடிப் பல ஆக்கங்களைத் தொகுத்து வெளிக்கொணர்ந்துள்ளார். எவரும் நோகாமல் நல்லவற்றையே பேசுவார். அல்லவற்றை, குதப்பி உள்ளே விழுங்கிவிடுவார்.

எம்மால் 2006 தொடக்கம் நடாத்தப்பட்டு வரும் ELAB – பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கத்தில் ஆர்வம்கொண்டு, இருந்து விட்டுக் கவிதைகள் அனுப்பி, இனிமேல் மாதாந்தம் இணையத்தளம் மூலம் எம் கருப்பொருள்களில் கவிதைகள் எழுதி அனுப்புவதாக அண்மையில் சொல்லியிருக்கிறார். எமது 'பூந்துணர்-2012' தபாலில் கிடைத்த அடுத்த தினமே, 'ஐயா, ஒரு பக்கமும் விடாமல் படித்து முடித்து விட்டேன். இது ஒரு பாட நூலாகவோ ஆராய்ச்சி உசாவு – நூலாகவோ (Reference Book) இருக்க வேண்டியது. மிகப்பிரமாதம்!' என்று தொலைபேசியில் வாழ்த்திய நுண்ணிய, உண்மைமனத்து விமர்சகர். கௌரவ கலாநிதிப்பட்டம் உடபடப் பலவிருதுகளைப் பெற்றுள்ள வித்தகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அவரை நெருங்கி அறிந்தது லண்டனிலேயே. இலங்கையில் நான் எந் திரிகத்துறையிலும் அவர் ஊடகத்துறை யிலும் மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்தோம். அன்றுநான் அறிந்தி ருந்த எழுத்தாளர் மிகச்சிலரே. ராஜா அரி யரத்தினம், சாவகச்சேரி இந்துக் கல்லூ ரியில் என் ஆசிரியர். பின் பகுதிநேர நிரு பரான சின்னையா சிவநேசனை அனுப்பி, நான் இயக்குனராக பதவியேற்ற சிறுகைத் தொழில் சேவைக்கழகத்தில் பேட்டிகண்டு 'சிந்தாமணி' ஞாயிறு இதழில் கட்டுரை எழுதுவித்தவர். அதே சிந்தாமணியின் அடுத்த ஆசிரியர் என்னைப் பற்றி ஓரி ரண்டு கிண்டல் செய்திகள் பிரசுரித்து நியாய மன்றத்தில் பிணக்குப்பட்டிருக்கிறோம். அப்போது ஈ.கே.ராஜகோபால் எழுதிய 'ஈழநாடு' பேட்டிக் கட்டுரையை சிவநேசன் தன் 'பொதுமக்கள்' வாக்குமூலத்தில் வாசித்துக்காட்டி, மற்றும் ஆதாரங்களு டனும் அவ்வழக்கை நாம்வென்று மான நட்டம் பெற்றோம். இன்று கனடா 'தமிழர் தகவல்' ஆசிரியராகிய எஸ். திருச்செல் வத்தை, அன்று சிவநேசன் இயக்குனராக வும் நான் தலைவராகவும் நடத்திய கவின் கலை மன்றத்தின் கவிதைக் கருத்தரங்கு களில் சந்தித்தேன். ஆனால் பொன்.பாலா, பிரித்தானிய மகாராணி, ஜவஹர்லால் நேரு, ராஜேந்திர பிரசாத், சௌ-என்-லாய், எஸ்.டபிள்யு.ஆர்.டீ. பண்டாரநாயக, இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள், களும் மந்திரிகளும் முதலிய பிரமுகர் களைப் பேட்டி கண்டு தோள்தட்டிக் கொண்டாடிப் பிரகாசித்த காலம் அது எனப் பின்னர் வாசித்து அறிந்தேன். மேலும், 1961-66 காலத்தில் நான் எனது முதுமாணி, கலாநிதி பட்டங்களுக்கும் எந்திரிகப்பட்ட யங்களுக்கும் இங்கிலாந்தில் ஓய்வு இன்றி உழைத்துக் கொண்டிருந்தேன் என்பதும் என் ஞாபகத்தில் வருகிறது.

இவ்வாறு பரந்த அனுபவமுள்ள ஆசி ரியரின் நான்முன்கூறிய நூலை தமிழர் வாங்குதற்கு அவரின் 85ம் ஆண்டு நிறைவு ஒரு அரிய சந்தர்ப்பம். அதை, நாம் வசிக் கும், எம் இரண்டாம் தாயகமாகிய பிரித் தானியாவுக்குப் புதிதாகக் குடிவந்துள்ள தமிழர்கள் எல்லோரும் அவசியம் படிக்க வேண்டும். அத்துடன் அண்மை ஆண்டு களில் குடியேறும் எண்ணமுள்ள எல்லோ ருக்கும் இந்நூல் மிகவும் பயன் படக் கூடி யது. மேலும், சமாதானமும் அரசியல் நிலைப்பாடும் கொண்ட இந்தியா, மலே சியா போன்ற நாடுகளில் வதிந்துவரும் தமிழர்களில், இங்கு உல்லாசப் பிரயாணி களாக, மாணவராக, அல்லது வேலையோ வர்த்தகமோ சம்பந்தமாய் உள் வர விரும் பும் தமிழர்கள் எல்லோருக்கும் இந்நூல் உதவும். ஏனெனில், எம் ஆசிரியர், தான் சொந் தத்தில், படிப்படியாகப்பெற்ற அனுபவத் தைக் கொண்டே இந்நூலை எழுதினார். இதில், பிரித்தானியாவின் வரலாற்று அர சியல்நிலை, முக்கிய நிறுவனங்கள், காட்சி கள், கலாசார அம்சங்கள், பழக்க வழக்கங் கள், ஊடக, பத்திரிகைகளின் போக்குகள், கொள்கைகள் எல்லாவற்றையும் நல்லது. கெட்டது ஒன்றையும் ஒளித்து மறைக்கா மல் 128-அதிகாரங்களில் பல அழகிய படங் களுடனும் நகைச்சுவையுடனும் ஜனரஞ் சகமாகத் திறமையுடன் எழுதியுள்ளார்.

முடிவில், எம் அருமை நண்பர் பொன். பாலா ஈழத்தமிழரால் பாதுகாக்க வேண்டிய லண்டன்வாழ் பொக்கிசங்களில் ஒன்று. எங்கள் ஈலாப் சங்கத்தில் இவரின் அறி வையும் அனுபவத்தையும் நாம் பாவிப்ப தைப் போல், கணினி மூலமும் இணை யத்தளம் மூலமும் இவர் செயலாற்றுவதே மிக்க உசிதம். ஏனெனில் ஒரு முதியவராக இருந்தும் இவரின் கணினித் திறமை மிக வும் பிரமாதம். எனவே பொன்.பாலா ஐயா வின் 90ம், 100ம் ஆண்டு விழாக்களைக் கொண்டாடும் நாட்களை இனிவரும் ஆண்டுகளில் நான் மிகவும் ஆவலுடன் எதிர்பார்ப்பேன் என வாழ்த்தி, வணங்கி, விடைபெறுகிறேன். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து மகாராணி எலிசபெத்




'இங்கிலாந்து மகாராணி எலிசபெத்' என்ற மகுடத்தில், மாட்சிமை தங்கிய எலிசபெத் மகாராணி பற்றி எழுத்தாளரும் சட்ட வல்லுநருமாகிய தமிழினி குலேந்திரன் தமிழ் மொழியில் ஒரு நூலை எழுதியுள்ளார். வரலாற்றுப் பதிவுகளுடனான முதல் தமிழ் நூல் என்ற பெருமைக்குரிய இந்த நூலின் வெளியீட்டு விழா 27.07.2013 அன்று இலண்டன் கொலியேர்ஸ் வூட் (Colliers Wood) சனசமூக நிலைய மண்டபத்தில் திருமதி தமிழினி திருக்குமரன் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.



அன்றைய விழாவில் இலக்கியம், இசை, நடனம், கல்வி ஆகிய துறைகளில் அரும் பணியாற்றியவர்களுக்கான 'வாழும்போது வாழ்த்து வோம் விருதும்' வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை சிறப்பு அம்ச மாகும். ஆற்றலும் ஆளுமையும் துணிவும் மிக்க உயர்திரு தமிழினி குலேந்திரன் அவர்களின் சிறப்புகளை விழாவில் பங்குகொண்டவர்கள் தமது உரைகளில் தனித்துவத்துடன் எடுத்துரைத்தனர்.



## சர்வதேச மான் புக்கர் விருது

2013ஆம் ஆண்டுக்கான மான்புக்கர் விருதுக்கான பரிந்துரையின் போது அமெரிக்க எழுத்தாளர் லைடியா டாவிஸ் கடும்போட்டிக்கு மத்தியில் புக்கர் விருதைத் தனதாக்கிக் கொண்டார். கடும்போட்டியாளராக இந்திய இலக்கியவாதி யூ.ஆர்.ஆனந்தமூர்த்தி இருந்துள்ளதாக அறியமுடிகிறது.

அண்மையில் லண்டனிலுள்ள விக்டோரியா அல்பிரட் தொல்பொருள் காட்சியகத்தில் ஐந்தாவது தடவையாக வழங்கப்படும் இவ்விருதுக்குரியவர் அறிவிக்கப்பட்டார். நியூயோர்க்கில் வசித்துவரும் அல்பெனி பல்கலைக்கழக பேராசிரியராகிய லைடியா டாவிஸ் பெரும் எண்ணிக்கையிலான சிறுகதைகளை எழுதிப் பிரபல்யமானவர். 60,000 ஸ்ரேலிங் பெறுமதி வாய்ந்த இவ்விருது வருடாவருடம் இலக்கியவாதிகளுக்கு வழங்கப்படுகின்றது. இம்முறை லைடியா டாவிஸ் என்றும் எழுத்தாளருக்குக் கிடைத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம்

# தமிழ் இலக்கியப் பரப்பில் திறனாய்வு பற்றிய நோக்கு

தமிழ் இலக்கியப் பரப்பில் முகிழ்ந்தெழுந்த நவீன இலக்கியம், ஆங்கிலக் கல்வி கற்ற எம்மவர்களால் எடுத்துவரப் பட்ட புதிய துறை சார்ந்த கருவூலமாகும். உரைநடையின் செல்வாக்கு ஆறுமுக நாவலருக்குப் பின் பிரவாகம் கொண்டு எழுந்த வேளை, ஆங்கில இலக்கியப் பரப்பில் செல்வாக்குச் செலுத்திய நாவல், சிறுகதை என்பவற்றை மொழிபெயர்ப்புச் செய்த அதேவேளை, தமிழ்மொழியிலும் அப்படியான படைப்புக்களை உருவாக்க முடியும் என்று துணிந்து நாவல், சிறுகதை இலக்கியங்களைப் படைக்கலாயினர். தமிழ் இலக்கியத்தில் நாவல், சிறுகதை ஆகிய துறை சார்ந்து எழுதும் பல படைப்பாளிகள் பலர் தோன்றலாயினர்.

ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் ஈழ கேசரி காலம், மறுமலர்ச்சி காலம், முற்போக்கு காலம் என்ற காலப் பகுதிகளில் பல எழுத்தாளர்கள் தோன்றி தமது ஆக்க இலக்கியப் பங்களிப்புக்களை முன்னிறுத்தினர். 1930 களில் இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம், சம்பந்தர் போன்றோர் பிரபல்யம் பெற்றிருந்தனர். இவர்களைத் தொடர்ந்து 1940களில் வரதரை ஆசிரியராக்க கொண்டு மறுமலர்ச்சி இதழ் வெளிவரத் தொடங்கியது. வரதர், கனக செந்திநாதன், இராசநாயகன், சொக்கன், அ.செ.முருகானந்தம், அ.ந.கந்தசாமி ஆகியோர் மறுமலர்ச்சிக் கால எழுத்தாளர்களாக இலக்கிய உலகில் அறியப்பட்டார்கள்.

இலங்கையில் 50 களுக்குப் பின்னரான காலப் பகுதி அரசியல், சமூக, பொருளாதார, கலை இலக்கியத் துறைகளில் முன்னேற்றகரமான பங்களிப்புகளை வழங்கத் தொடங்கியது. பொதுவுடமைக் கொள்கையின் செல்வாக்குப் பலதுறைகளிலும் முன்னெடுக்கப்பட்டது. இக்காலப் பகுதியில் தான் முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கம் உதயமாகியது. 'இலக்கியம் மக்களுக்காக' என்ற கோட்பாடு முன்னிறுத்தப்பட்டு இலக்கியப் படைப்புகள் தோன்றலாயின. நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் செழுமைக்கும் முற்போக்கு இலக்கியம் பெரும் பங்களித்துள்ளது. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கே.கணேஷ், கே.இராமநாதன், அ.ந.கந்தசாமி, பிரேம்ஜி ஞானசுந்தரம் ஆகியோரின் முன்முயற்சியினால் உருவாகியது. மூன்று தசாப்தங்களில் (1953 – 1982) முற்போக்கு இலக்கிய இயக்கம் எழுச்சியடைந்து வீறுநடையுடன் செயலாற்றியது. அதன் கருத்தியல் தளத்தின் தலைமகனாக பேராசிரியர் க.கைலாசபதி விளங்கினார்.

முற்போக்கு எழுத்தாளர் நாவல், சிறுகதை, கவிதை, விமர்சனம் ஆகிய இலக்கியத் துறைசார்ந்து எழுதிவரலாயினர். நாவல் இலக்கியத்தைப் பொறுத்தளவில் இளங்கீரன், செ.கணேசலிங்கன், கே. டானியல், செ.யோகநாதன் ஆகியோரின் படைப்புக்கள் புதிய செல்நெறியில் பயணித்துள்ளதுடன் செழுமையானவையாகவும் அமைந்தன. சிறுகதைத்துறையில் என்.கே.ரகுநாதன், கே.டானியல், டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன், எஸ். அகஸ்தியர், காவலூர் இராசதுரை, பெனடிக் பாலன், செ.யோகநாதன், செ.கதிர்காமநாதன், தெணியான் என்று பல படைப்பாளிகள் கால்பதித்து முற்போக்கான கருத்துக்களை முன்னிலைப்படுத்தி எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனர். கவிதைத் துறையில் இ.முருகையன், எம்.ஏ.நுஃமான், சில்லையூர் செல்வராஜன், கே.பசுபதி, சுபத்திரன், சாருமதி ஆகியவர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

விமர்சனத்துறையைப் பொறுத்தளவில் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி ஆகியோரின் பங்களிப்பு முக்கியமானதாகும். தமிழ் இலக்கிய விமர்சன ஆய்வுத் துறையில் முதல் முதலாக மார்க்சிய வழிமுறையைக் கையாண்டவர் க.கைலாசபதிதான். அவரது மார்க்சிய விமர்சன ஆய்வின் அணுகுமுறை தமிழ் இலக்கியத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்துள்ளது.

இத்தகைய முன்னெடுப்புகளுடன் தமிழ் இலக்கியப் பரப்பில் திறனாய்வு பற்றி நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். "ஐரோப்பியச் சூழலில் பல்வேறு திறனாய்வுக் கோட்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன. பன்மைச் சூழலும் அறிவின் புத்தாக்க வடிவங்களும், கலை இலக்கியங்களை அணுகும் முறைகளும், புதிய திறனாய்வு வடிவங்களை உருவாக்கி வருகின்றன. தமிழ் மரபுக்குரிய திறனாய்வு அணுகுமுறையின் தோற்றத்தினைத் தொல்காப்பியத்திலே காணமுடியும். தமிழில் உருவாக்கம் பெற்ற இலக்கண நூல்களிலும், உரை மரபுகளிலும் திறனாய்வுச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

"மேலைப்புலத் திறனாய்வுக் கோட்பாடுகள் கருத்தியலை உட்பொதிந்த வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. கருத்தியலும் திறனாய்வும் வேறு பிரிக்க முடியாதவை என்பதை வலியுறுத்த வேண்டியுள்ளது" என பேராசிரியர் சபா ஜெயராசா தமது 'தமிழியலும் திறனாய்வுக் கலையும்' என்னும் நூலில் தெளிவுபடுத்தியுள்ளார். தமிழ் நிலைப்பட்ட திறனாய்வுச் சிந்தனைக்கான இந்தத் தேடல் நமக்கான அடையாள இருப்பை உறுதிப்படுத்துவதற்கான அவசியத்தை வலியுறுத்துகின்றது.

திறனாய்வு என்பது இலக்கியங்கள் பற்றிய பகுப்பாய்வு, விளக்கம், மதிப்பீடு, நலம் பாராட்டல் என்ற நான்கு பண்புகளை உள்ளடக்கியுள்ளது. வின்செஸ்டா என்னும் திறனாய்வாளர் "எந்தக் கலைப்படைப்பையேனும் அறிவு நிலையில் அணுகி அதன் நலன் பாராட்டலும் அதன் விளைவாக அப்படைப்பின் மதிப்பையும் அது பெறும் இடத்தையும் எடுத்துரைப்பதே திறனாய்வு" என்று வரைவிலக்கணத்தைத் தந்துள்ளார்.

ஆபர் குரோம்பி என்பவர் "இலக்கியம் படைக்கும் ஆற்றல் உள்ளவன் தனது படைப்பாற்றலைச் செம்மையான முறையில் அறிவு சான்ற வகையில் பயன்படுத்துவதற்கும், இலக்கியத்தை சுவைக்கும் திறன் படைத்தவன், நன்மை, தீமை பாகுபாடு அறிந்து, அறிவுக்குப் பொருந்தும் வகையில் முறையாக இலக்கியத்தைச் சுவைப்பதற்கும் திறனாய்வு பயன்படுகின்றது" என்று கூறியுள்ளார். "ஒரு படைப்பின் பண்பு நலன்களை அவற்றின் மூலகங்களை அடிப்படையாகக்கொண்டு விளக்கும்போது.... அதன் உள்ளடக்கத்தை, உணர்வை, கலைநயத்தை வெளிப்படுத்துவர்" என்று ஹட்சன் திறனாய்வின் விளக்கத்தை முன்வைக் கிறார்.

சமூகவியல் அணுகுமுறையை நோக்கும்போது "....சமுதாயம், நிகழ் காலம், சூழ்நிலை என்ற மூன்றும் எல்லா வகையான இலக்கியங்களுக்கும் அடிப்படைக் காரணங்களாக விளங்குகின்றன. இவை புகழ்மிக்க கலையிலும் இலக்கியத்திலும் இடம்பெறுகின்றன" என்பதே டெயினின் கோட்பாடாகும். ஒவ்வொருவருடைய இலக்கிய சம்பந்தமான கோட்பாடுகளும் முன்வைக்கப்பட்டபோதிலும், மார்க்சிய அணுகு முறையே சமூகவியல் அறிவியலாளர் பின்பற்றத்தக்க அணுகுமுறை என இ.மறைமலை அவர்கள் குறிப்பிட்டுள்ளது அவதானிக்கத்தக்கதாகும்.

சோவியத் இலக்கியத் திறனாய்வாள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரான லுனாச் சார்க்கி என்பவரே மார்க்சிய திறனாய்வின் சிறப்பினையும் செய்முறை யையும் திட்டவட்டமாக எடுத்து விளக்கி யுள்ளார். அவர் *"ஏனைய இலக்கியத் திற னாய்வுகளில் நின்றும் மார்க்சிய திறனாய்வு வேறுபடுவதற்கு முதன்மைக் காணைம் அது சமூகவியல் அடிப்படையில் - மர்க்சும் லெனினும் காட்டிய அறிவியல் சமூகவி யல் அடிப்படையில் அமைந்திருப்பதேயா கும்"* என்று குறிப்பிட்டுள்ளார். இலக்கியத் திறனாய்வைப் பொறுத்தளவில், சமூகவி யல் பகுப்பாய்வுக்கே மார்க்சிசத் திறனாய்வு முக்கியத்துவம் வழங்குகின்றது. "யதார்த் தத்திலிருந்து தம்மை ஒளித்துக் கொள்ள விரும்பும் அத்தகைய படைப்பாளிகளின் மனோ நிலையையும், சூழ்நிலையையும் அம் பலப்படுத்துவதே மார்க்சிசத் திறனாய் வாளரின் கடமையாகும்" என்று லுனாச் சார்க்சி குறிப்பிட்டுள்ளார்.

இலக்கியத்தைப் பகுத்தறிவு முறையில் ஆராய்ந்து அதன் சமூகப் பயன்பாட்டைத் திட்டவட்டமாக எடுத்துரைக்கின்றது. படைப்பாளிகளின் வர்க்கச் சார்பையும் படைக்கப்பட்ட காலத்தின் சமூகச் சூழ லையும் விளக்குகின்றது. உளவியல், சமூக வியல், மானிடவியல், வரலாறு, பொருளி யல் ஆகியவற்றின் துணைகொண்டு பரந்த இலக்கிய ஆய்வுக்கு வழிவகுக்கின் றது. மேற்கூறப்பட்ட சிறப்பியல்புகளை மார்க்சிய திறனாய்வில் கண்டுகொள்ள லாம்.

திறனாய்வு பற்றி ஒரு முழுமையான தெளிவை அறிந்துகொள்வதற்குப் பின் வரும் நூல்கள் எமக்குத் துணை புரிகின் றன. மார்க்சியத் திறனாய்வாளரின் வரிசை யில் கிறிஸ்டோபர் காடுவல் எழுதிய 'பொய் மையும்மெய்மையும்', பேராசிரியர் க.கைலா சபதி எழுதிய 'இலக்கியமும் திறனாய் வும்', சி.இ.மறைமலை எழுதிய 'இலக்கியத் திறனாய்வு ஓர் அறிமுகம்', பேராசிரியர் சபா ஜெயராஜா எழுதிய 'பேராசிரியர் கைலாசபதியும் இயங்கியல் விமர்சன நெறி யும்' மற்றும் 'தமிழியலும் திறனாய்வுக் கலை யும்' போன்ற நூல்களைத் திறனாய்வாளர் கள் படித்துப் பயன் பெறுவார்களேயா னால் திறனாய்வுத்துறை ஆரோக்கியமான தாக அமையும்.

தமிழ் நாட்டினை விட இலங்கையில் விமர்சனத்துறை பின்வரும் காரணங்க ளால் முன்னணியில் நிற்கின்றது என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி எடுத்துக் கூறி யுள்ளார். *"இலக்கியக் கல்விக்கும் ஆராய்ச் சிக்கும் ஆதாரமாக அமையும் விமர்சன நூல்கள் இலங்கையரால் எழுதப்படுகின் றமையும், இலக்கியப் பயில்நிலைப் பின்ன ணியும், ஆக்க இலக்கிய கர்த்தா எனத் தம் மைக் கருதிக் கொண்டு யாவருமே விமர்ச னத் துறையிலும் ஈடுபாடு செலுத்தி வந்த மையுமாகும்"* என்று அமைகிறது.

உலக அறிவுப் பரப்பிலே தோற்றம் பெற்ற திறனாய்வுச் செயற்பாடுகள் பின் வருவனவற்றைக் குவியப்படுத்தின. இலக் கியத்தின் இயல்பு, இலக்கிய ஆக்கம் உருப்பெறும் செயல்முறை, இலக்கியத்தி னூடாக வெளிக்கிளம்பும் சமூக இயல்பும் படைப்பாளியின் ஆளுமையும், குறித்த படைப்பின் அல்லது நூலியத்தின் உள் நோக்கம், அழகியல், வரன்முறையியல், அறவியல், வரலாற்றியல், சமூகவியல் ஆகிய தளங்களிலே குறித்த படைப்பைப் பற்றிய தீர்ப்புக் கூறல் என்பனவையாகும். திறனாய்வு வரலாற்றை ஆழ்ந்து நோக்கும் போது, சமூக உருவாக்கம் மற்றும் அரசின் உருவாக்கம் ஆகியவற்றுக்கும் திறனாய் வுக் கோட்பாடுகளின் ஆக்கங்களுக்குமி டையே நெருங்கிய உறவும் இடைவினை களும் இருத்தலைக் காணமுடியும்.

இருபதாம் நூற்றாண்டின் பல்வேறு சமூக மாற்றங்களும் நிகழ்ச்சிகளும் அந் நூற்றாண்டைத் 'திறனாய்வின் நூற்றாண் டாக' அடையாளப்படுத்தியது. மெய்யியலி லும் சமூகவியலும் மார்க்சியச் சிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் பரவலானது அறிவு நிலையிலே புதிய காட்சிகளைத் தோற்றுவித்தது. மரபு வழியான அறிகை அமைப்பிலே மார்க்சியமும் அதன் பின்னெழுந்த வளர்ச்சிகளும் அதிர்வுகளையும் பெயர்ச்சிகளையும் ஏற்படுத்தின. சமூக வளர்ச்சியினதும் அறிவு வளர்ச்சியினதும் பன்முகப்பாடு பல் வேறு திறனாய்வுக் கோட்பாடுகளை உருவாக்கிய வண்ணமுள்ளது. திறனாய்வுக் கோட்பாட்டின் பலம் சமூக வாழ்வின் கூர்ந்த நுண் அலகுகளையும் அழகியல் ஆக்க வெளியையும் பற்றிப் பிடித்தலோடு தொடர்புடையது.

மார்க்சிய இயங்கியல் தருக்கம் இதுவரை உருவாக்கப் பெற்ற சமூகத் தருக்கங்களில் மேனிலையில் இருப்பதோடு அது மட்டுமே பொல்லா நிலவரங்களையும் மாற்றியமைக்கும் வல்லமையும் கொண்டது. அடிப்படை நிலையில் மார்க்சியத் தருக்கத்தை வைத்துக்கொண்டு எமது சூழலுக்குரிய தனித்துவம், அடையாள நெருக்கடிகள், பண்பாட்டு அலகுகளின் இயல்புகள், நுண்மையான கூறுகள், உளப்பாங்குகள், நம்பிக்கைகள் முதலியவற்றைத் தழுவியதாகத் திறனாய்வுக் கோட்பாட்டை உருவாக்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

இலங்கையின் விமர்சனத்துறை வளர்ச்சியடைவதற்கு மறுமலர்ச்சிக் குழு இலக்கிய கர்த்தாக்கள், முற்போக்கு இலக்கிய கர்த்தாக்கள், பல்கலைக்கழக வழிவந்த முற்போக்கு விமர்சகர்கள், ஆக்க இலக்கிய கர்த்தாக்கள், கல்விமான்கள் என்போர் பெரும் பங்காற்றியுள்ளனர். எனவே தான் இலங்கையின் இலக்கிய வரலாற்றில் திறனாய்வுத்துறை சீரிய வளர்ச்சியைக் கண்டு நிற்கின்றது.

-தம்பு சிவா

## கவிதை

# கண்ணனைத் தேடி வந்திடுங்கள்

- முனாகானா
ஆரையம்பதி



**கண்ணனை என்றும் நினைத்திடுங்கள் - இவன்**
**காலடி தன்னில் வீழ்ந்திடுங்கள்**
**எண்ணிய எண்ணம் ஈடேறும் - நாம்**
**பண்ணிய பாவம் பறந்தோடும்.**

**காத்திடும் தெய்வம் இவனாவான் - நம்**
**கவலையைப் போக்கும் குருவாவான்**
**நாத்திகம் பேசும் மனிதருக்கும் - இவன்**
**நல்லருள் பொழியும் முகிலாவான்**

**வாழ்வினில் சோர்வு கண்டவர்க்கும் - இவன்**
**வழங்கிய கீதை வழி காட்டும்**
**ஊழ் வினை யாலே தவிப்பவர்க்கு - இவன்**
**ஒருகரந்த தானே திசைகாட்டும்.**

**கண்ணனை வணங்குதல் நம் கடமை - நம்**
**கவலையைத் தீர்ப்பது இவன் கடமை**
**புண்ணி பாவம் தெரியாமல் - இந்த**
**பூமியில் வாழ்வது பெரும்மடமை.**

**சக்கரத்தாலே நோயறுப்பான் - வெண்**
**சங்கினை ஊதி வினையறுப்பான்**
**அற்புதத் தெய்வம் கண்ணனைத் - தேடி**
**ஆரையம் பதிக்கே வந்திடுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகம்

# கனடாவில் எங்கள் ஆனந்தர் சுப்பிரமணியம்

உலகோர் உவந்து போற்றச் செந்தமிழும் சைவத் திருநெறியும் திளைத்தோங்கும் ஈழவள நாட்டில் இணையிலி எனத் தமிழ் நூல்களால் புகழ்ந்துரைக்கப்பட்ட இணுவைத் திருவூரில் வாழ்ந்த பெரியதம்பி ஆனந்தர் - செல்லம்மா தம்பதிகளின் மூத்த மகன் சுப்பிரமணியம் ஆவார். இவர் இளமை முதல் நற்குண நற்செய்கைகளால் பெற்றோராலும், உற்றார் உறவினராலும் பாராட்டப்பட்டவர். இணுவில் சைவ மகாஜனா வித்தியாசாலையில் ஆரம்பம் முதல் சிரேட்டதராதரம் வரை படித்துச் சித்தி எய்தியவர். அங்கு பயிலுங்கால் கொழும்பு விவேகானந்த சபையாரால் நடாத்தப்பட்ட சமய பாடப் பரீட்சையில் முதல் பிரிவில் சித்தி பெற்றுப் பரிசிலும் பெற்றவர்.

தமிழ்கூறும்நல்லுலகோரால் பாரட்டப்பட்ட பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர், அவர்தம் மூத்த சகோதரர் ஆசிரியர் கந்தசாமி ஐயர், பிரபல தவில் வித்தவான் வி.தட்சணாமூர்த்தி ஆகியோர் இவர் படித்த காலத்தில் படித்தவர்களாவர். சிரேட்டதராதரம் பெற்ற பின் ஏழாலை அரசினார் பாடசாலையில் A.S.C வகுப்பில் படித்தவர். அதன்பின் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக் கல்லூரியில் பயின்றவர். அங்கு தமிழ் மாணவர் தேர்ச்சிச் சங்கத்தில் தலைவராகவும் இருந்தவர். அங்கு பயிலுங்கால் ஆசிரியர் பண்டிதர் K.S.தம்பையா, பண்டிதர் இ. இராசலிங்கம், பண்டிதர் இ.திருநாவுக்கரசு ஆகியோரிடம் பாலபண்டிதர் பரீட்சைப் பாடங்களைப் படித்தவர். தமிழ் ஆசிரிய தராதரம் ஆசிரிய பயிற்சி பெற்ற பின் பொகவந்தலாவ சென்மேரி வித்தியாசாலையிலும் மஸ்கேலியா சென்.யோசப் வித்தியாலயத்திலும் கடமையாற்றியவர். அங்கு கற்பிக்குங்கால் 1972 இல் அகில இலங்கை கல்விப் பகுதியாரால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் இவரது மாணவிக்கு இரண்டாம் இடம் சான்றிதழும் கிடைத்தன.

இங்கு பணியாற்றியபின் கோண்டாவில் பரஞ்சோதிக்கு மாற்றம் பெற்றார். அக்காலத்து கொழும்பு விவேகானந்த சபையால் நடாத்தப்பட்ட "சைவ சமய உயர் தகைமைச் சான்றிதழ் பரீடசை எழுதிச் சித்தியும் பெற்றார். அக்காலத்து கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம் என்பவற்றிற்குப் பயன் சொல்ல பண்டிதர் சிவப்பிரகாசம், பண்டிதர் திருநாவுக்கரசு, சைவப் புலவர் திருஞானசம்பந்தபிள்ளை என்பார்க்கு உதவுகரமாக விளங்கியவர். 1991 இல் கனடா சென்றபின் கனடாக் கந்தசுவாமி ஆலயத்தில் திருவிளையாடற் புராணம், திருச்செந்தூர்ப்புராணம், கந்த புராணம், திருவாதவூரடிகள் புராணம் ஆகியவற்றிற்குப் பயன் கூறுபவர். 2002 இல் திருவிளையாடற்புராணப் பூர்த்தி விழாவில் பேராசிரியர் கலாநிதி சரசுவதி இராமநாதன் அவர்களால் விருது வழங்கி பொன்னாடையும் போர்க்கப்பட்டவர். 2007 ஆம் ஆண்டு லண்டன் நகரில் வாழும் பிரம்மஸ்ரீ கெங்காதரக் குருக்களால் கந்தபுராணப் பயன் கூறியமைக்காகக் கௌரவித்துப் பொன்னாடை போர்க்கப்பட்டவர். கௌரவ ஒன்ராறியோ பிரதமரால் (DALTON MACKANCY) 2009இல் கனடா கந்தசுவாமி ஆலயத்திற்கு ஆற்றிய பணிக்குச் சான்றிதழ் பெற்றவர்.

கனடாவில் பிரசுரிக்கப்படும் செந்தாமரை, பொதிகை, சூரியன், அதன்பின் உதயன் ஆகிய பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதியவர். இவர் இணுவில் திருவூர் ஒன்றியம் கனடாக் கிளையின் காப்பாளர்களில் ஒருவர். இவரது மூத்த மகன் பொறியியலாளர். அவுஸ்திரேலியா சிட்னியில் தொழில் புரிகிறார்.

■ **இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீகக் கட்டுரை

# ஆழ நுழைந்தும் அகல விரிந்தும் இயக்கும் சக்தி

**சக்தி வழிபாட்டின் பெருமைக்குரிய நவ ராத்திரி விழாவை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**



நாம் பூமி எனும் கோளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பூமி சூரியக் குடும்பத்தில் ஓர் அங்கம். சூரியக் குடும்பம் பால்வெளியில் அமைந்துள்ளது. பால்வெளி பிரபஞ்சத்தில் இருக்கிறது என்பர். பிரபஞ்சம் என்பது பஞ்ச என்ற சொல்லிலிருந்து வந்தததது. பஞ்ச என்றால் ஐந்து என்பது பொருள். நிலம், நீர், தீ, காற்று ஆகாயம் என்னும் ஐந்து மூலப் பொருள்கள் - பஞ்ச பூதங்கள் - இவை அனைத்துக்கும் அடிப்படையாக உள்ளன. பூதம் என்றால் உண்டாகுவது எனப் பொருள். பிரபஞ்சத்திலுள்ள எந்தப் பொருளை எடுத்துப் பகுப்பாய்வு செய்தாலும் அது இந்த ஐந்து மூலப் பொருள்களாலும் ஆக்கப்பட்டதாகவே இருக்கும். இது ஒரு நியமம் ஆகும். நியமம் - கட்டுப்பாடு, ஒழுங்கு.

இந்த நியதியை ஏற்படுத்தியவர் யார்? இந்தக் கேள்வி மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே இருந்து வருகிறது. நாம் எங்கிருந்து எப்படி வந்தோம்? எவ்வாறு இயங்குகிறோம்? இறந்தபின் என்ன நடக்கிறது? இவையும் விடை தெரியாத கேள்விகள்! நம்மைக் கடந்துநின்று இந்தப் பிரபஞ்சத்தை இயக்குபராகவும் நமக்குள் உள்ளேயிருந்து நம்மை இயக்குபவராகவும் யாரோ ஒருவர் அல்லது ஒரு சக்தி இருக்கின்றது என்பதை உணர்ந்தபோது அதனையே கடவுள் (கட+உள்) என்றனர்.

உலகின் முதல் இலக்கியமாக இன்றளவும் நிலவிக்கொண்டிருக்கின்ற வேத இலக்கியங்கள் இயற்கையினூடாக இந்த உயர் சக்தியைக் கண்டறிந்து போற்றியுள்ளமை வியப்புக்குரியது. சூரிய சந்திரரர்களின் இயக்கமும் காலங்களின் சுழற்சியும் தாவரங்கள், விலங்குகள், பறவைகள், மனிதர்கள் எனும் உயிரினங்கள் ஒன்றில் ஒன்று தங்கி வாழும் முறைமையும் ஓர் ஒழுங்கு முறையில் இருப்பதை அவதானித்து அதற்கு அந்த வேதகால மக்கள் மதிப்பளித்துள்ளனர் என்பதை அந்த இலக்கியங்களை நோக்கும்போது உணரமுடிகின்றது. அந்த ஒழுங்குமுறைக்கு அவர்கள் 'ரிதம்' என்று பெயரிட்டிருக்கின்றனர்.

பூமி சுழல்கிறது. சந்திரன் பூமியைச் சுற்றுகிறது. பூமி சூரியனைச் சுற்றுகிறது. மிகப்பெரும் சக்திகனலான அந்த சூரியன் எனும் பிரபஞ்ச மூலப் பொருளும் இயங்கியவாறே உள்ளது. **இயக்கம் இல்லாவிடில சக்தி உண்டாகமாட்டாது. சக்தி இல்லாவிடில் இயக்கம் இல்லை.** எனும் எதிரும் புதிருமான இந்தப் பேருண்மையை ஆராய்ந்த ஞானிகள் இரண்டு பேருண்மைகளைப் புரிந்துகொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியே முதன்மையானது என்பது முதலாவது பேருண்மை.

அந்த சக்தி சரியாகச் செயற்பட வேண்டுமானால் எல்லா நிலைகளிலும் ஓர் ஒழுங்கமைப்பு பேணப்படவேண்டும் என்பது இரண்டாவது பேருண்மை.

இயற்கையில் இயல்பாகவே தொடர்ச்சியாகப் பேணப்படும் இந்த ஒழுங்கமைப்பை அவதானித்து வியக்கும் நிலை மட்டுமல்லாமல் அந்த ஒழுங்குநிலை (இயல்பாகவே எதுமொரு இனந்தெரியாத மாற்றத்தால்) குழம்பும்போதும் (மனிதர்களால் ஏதுமொரு தேவை கருதி) குழப்பப்படும் போது இயற்கையில் ஏற்படும் சீற்றத்தையும் அதனால் ஏற்படும் அழிவுகளையும் கண்டுணர்ந்து பயப்படும் நிலையும் அந்த ஆதிகாலத்து அறிஞர்களிடம் இருந்தது. அவர்கள் இயற்கைக்கு மதிப்பளித்து அதனோடு இசைந்து வாழ்ந்தனர்.

சக்தியின் இரு நிலைகளை அந்த ஞானிகள் விளங்கிக்கொண்டனர். ஒன்று இயங்காத நிலையில் எல்லாப் பொருள்களினுள்ளும் மறைந்து கிடக்கும் நிலைச் சக்தி (Potential energy) மற்றது பொருள்கள் இயங்கும்போது அதிலிருந்து வெளிப்படும் இயக்க சக்தி (Kinetic energy). இயங்காத நிலையிலுள்ள பொருள்களினுள் சமநிலை பேணும் ஒரு பொருளும் சக்தியை வெளிப்படுத்தக்கூடிய ஒரு பொருளும் மறை பொருள்களாகக் கரந்துறைகின்றன என அவர்கள் உணர்ந்துகொண்டார்கள்.

இந்த அளவில் ஒருமைப்பட்டிருந்த ஞானிகள் இதன்பின் இரு நிலைகளில் செயற்படஆரம்பித்தனர்.

ஒரு வகையினர் வெளியே நோக்கி (அகன்ற நோக்கில்) தங்கள் பார்வையைச் செலுத்தி விஞ்ஞானிகள் ஆயினர்.

மறுவகையினர் உள்ளே நோக்கி (ஆழ்ந்த நோக்கில் ) தங்கள் பார்வையைச் செலுத்தி மெஞ்ஞானி ஆயினர்.

இயங்காத நிலைப் பொருள்களிலும் கூட இலத்திரன் என்னும் இயங்குநிலைத் துணிக்கையையும் அதற்கு ஆதாரமான புரோத்தன் என்னும் நிலையான துணிக்கையையும் விஞ்ஞானிகள் கண்டறிந்து அதனைப் பலவிதமாகச் சேர்த்தும் பிளந்தும் சக்தியை அளவிடமுடியாத அளவில் பெருக்கியும் உலகையே ஆட்டி வைக்கின்றனர் இன்று. அணுயுகம் மாறி இலத்திரன் யுகம் வந்து தாமே படைத்த சக்தியைத் தாமே கட்டுப்படுத்தமுடியாமலும் தடுமாறி, வியந்தும், மகிழ்ந்தும், வருந்தியும், திகைத்தும் வாழ்கின்றனர்.

மறுபுறம், பிரபஞ்சமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கம் பெரும் இயக்க சக்திக்கு ஆடல்வல்லான் எனப் பெயரிட்டு நடராஜ வடிவத்தைக் கொடுத்து மகிழ்ந்தனர் மெய்ஞ்ஞானிகள். அந்த இயக்க சக்தியை ஆகாயப் பெருவெளியிலிருந்து படிப்படியாகக் காற்று, நீர், நெருப்பு என்னும் பூதங்களினூடாக இறக்கிவந்து (யாகங்கள், ஹோமங்கள், அபிஷேகங்கள், பூஜைகள், பிரார்த்தனைகள் மூலமாக) நிலையான புவிப்பொருள்களான கருங்கல், செப்பு உலோகம், மரம் முதலிய இயற்கைப் பொருள்களாலான விக்கிரகங்களில் அசையாத நிலைச் சக்தியாகச் சேமித்து வைத்து, வேண்டிய பொழுதில் வழிபாடுகளின் மூலம் இதயப் பெருவெளியில் (சிதாகாசம்) கொண்டு வந்து மறுபடியும் இயங்குநிலையில் அந்த சக்தியை பயன் கொண்டு மகிழ்கின்றனர். சிவலிங்கம் என்னும் அருவுருவப் பொருளில் அந்தப் பெரும் சக்தி நிலைச் சக்தியாக அடங்கியிருக்கிறதை உணர்கின்றனர். இலத்திரனும் புரோத்தனுமாக விஞ்ஞானிகள் கண்டறியும் துணிக்கைகளை இவர்கள் சிவமும் சக்தியுமாகக் கண்டுணர்கின்றனர். அதனைத்தான் லிங்கமும் ஆவுடையாருமென அமைக்கின்றனர்.

சிவனும் சக்தியும் மகிழ்கின்றவாறு தாமும் நல்ல இல்லறத்தில் நின்று "பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே" என்று நல்ல குடும்பத்தை இனிதே பேணி மகிழ்கின்றனர். அங்கு பேணும் நல்லறமே தருமம் ஆகும். அதுவே ஒழுக்கமாகும். அதையே ஒழுங்கு என்றும் கட்டுப்பாடு என்றும் கூறுகிறோம்.

ஒரு புள்ளி ஒழுங்கான முறையில் இயங்குமாயின் அது ஒரு வடிவத்தை உண்டு பண்ணும் என்பது கணித நியதி. மாறாத ஒரு குறித்த தூரத்தை ஒரு புள்ளியிலிருந்து பேணுகின்ற இன்னொரு புள்ளி அந்தத் தூரத்தை ஆரமாகக் கொண்டு ஒரு வட்டத்தை உருவாக்குகிறது. இது அந்தப் புள்ளியின் ஒழுக்கு என்பது கணித பாஷை. ஒழுங்கு என்பதிலிருந்தே இச் சொல் வந்திருக்கிறது.

சூரியனைச் சுற்றும் கோள்களின் பாதை ஓர் ஒழுங்கில் அமைந்துள்ளது.

இந்த ஒழுங்கமைப்புகள் பேணப்படும் போதுதான் இயற்கை நியதிகள் சரியாக அமையும் என்பதைப் புரிந்துகொண்ட ஞானிகள் நமது வாழ்க்கைக்கு பல ஒழுங்கமைப்புக்களை அமைத்துத் தந்தனர். அந்த ஒழுக்கக் கோவைகள்தான் தர்ம சாஸ்திரங்கள். இப்படி இப்படி வாழவேண்டும், இப்படி இப்படி வாழக்கூடாது என அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். அதே போல சில ஒழுங்கமைப்புக்களை விஞ்ஞானிகள், வைத்தியர்கள், பொருளாதார நிபுணர்கள், சமூகவியல் அறிஞர்கள் முதலானோரும் நமக்கு விதித்துள்ளனர். நாம் அவற்றைப் பேணும்போது சமநிலை வாழ்க்கை ஒழுங்காக நடைபெறுகிறது.

பாடசாலையில் மாணவர்களுக்கு சில விதிமுறைகள் உள்ளன. தெருவில் நடந்தும் வாகனங்களிலும் செல்பவர்களுக்கும் தனித்தனியான சில விதிமுறைகள் உள்ளன. அலுவலகங்களில் வேலை செய்பவர்களுக்கு சில ஒழுங்குமுறைகள் உள்ளன. இவற்றை யாவரும் பேணிவருதல் தான் ஒழுக்கம் எனப்படும்.

உலக மக்கள் யாவராலும் தத்தமக்குரிய ஒழுக்கமும் ஒழுங்கும் பேணப்பட்டால் வெளியே பரந்திருக்கும் சக்தியின் அரசாட்சியும் உள்ளே மறைந்திருக்கும் இறைசக்தியின் அருளாட்சியும் ஒருகிணைந்து நம்மை அறிவாட்சி மிக்க பேராளர்களாகவும் அன்புணர்வு மிக்க அருளாளர்களாகவும் ஆக்கி இன்ப வாழ்வுக்குத் துணைபுரியுமல்லவா?

**வித்யாபூஷணம் பிரம்மஸ்ரீ**
**ப.சிவானந்தசர்மா B.A.(Hons)**
*(கோப்பாய் சிவம்)*


**இணுவில் ஒலி - சந்தா விவரம்**

ஒரு வருடச் சந்தா - ரூபா 600 (அஞ்சல் செலவுடன்)
வெளிநாடு - $ 25 (U.S) "

உங்கள் இணுவில் ஒலியின் வளர்ச்சிக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரவு நல்குங்கள்.

தொடர்பு :
த.சிவசுப்பிரமணியம்
9-2/1, நெல்சன் பிளேஸ்,
கொழும்பு - 06.
இலங்கை
தொ.இல. 071 8676482

சி.சரவணபவன்
காரைக்கால் ஒழுங்கை,
இணுவில் கிழக்கு,
சுன்னாகம், இலங்கை.
தொ.இல. 077 3126802

வங்கிக் கணக்கு விவரம்:
வங்கி/Bank : Commercial Bank - Wellawatte
A/C No: 8100086490


**வாசகப் பெருமக்களே! மாணவச் செல்வங்களே!**

நீங்கள் அறிந்த, தெரிந்த சிறு, சிறு விடயங்களைச் சுருக்கமாக எமக்கு அனுப்பிவைத்தால் அவற்றை 'அறிந்தவையும் தெரிந்தவையும்' பகுதியில் வெளியிடுவோம். உண்மைகள் என்றும் மறைக்கப்படக் கூடாது. எனவே தவறாது எழுதுங்கள்.

**- ஆசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விப்பட்டதைச் சொல்லவந்தோம்!

இன்றைய சமுதாயத்தின் கண் இளையோராகிய மாணவர்கள் முக்கியமானவர்கள். அவர்களைப்பற்றிய பல்வேறுபட்ட கருத்துக்கள் தினமும் வெளிவந்தவண்ணம் உள்ளன. சமுதாய நலன் கருதி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, நீதிபதி, கல்வி அதிகாரி, பொலிஸ் அதிகாரி ஆகிய நால்வரும் முன்வைத்த பொறுப்புடனான கருத்துக்களை 'இணுவில் ஒலி' வாசகர்களுக்குத் தருவதில் அக்கறை கொண்டுள்ளது.

– ஆசிரியர் –

❖ "பெற்றோர்களின் நடத்தைக் கோலங்களே பிள்ளைகளின் மாற்றத்துக்குத் காரணம்" என்று ஒரு காவற்றுறை பொறுப்பதிகாரி கூறியிருப்பது உண்மையான செய்தியாகும். மாணவர்கள் மத்தியில் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கு கையடக்கத் தொலைபேசிப் பாவனையே காரணமாக அமைகிறது. இவ்விடயத்தில் பெற்றோர் அவதானமாக இருக்க வேண்டும். சமீப காலமாக மாணவர்கள் மத்தியிலே குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் பெற்றோர் தங்களது பிள்ளைகளில் அக்கறை செலுத்தாமையே ஆகும். பிள்ளைகள் யாருடன் பழகுகின்றனர், எங்கே போகின்றனர், என்ன செய்கின்றனர் என்பதைப் பற்றிக் கவனிக்க வேண்டும். பிள்ளைகளின் விடலைப் பருவத்தில் கூடிய கருசனை காட்ட வேண்டும். இல்லாவிட்டால் உங்களது பிள்ளைகளின் எதிர்காலத்தை தீர்மானிக்க முடியாத சூழலுக்குள் தள்ளப்பட்டவர்களாவீர்கள்.

இன்று எங்கு பார்த்தாலும் சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோக சம்பவங்களே இடம்பெறுகின்றன. பிள்ளைகளைத் துஷ்பிரயோகங்களுக்குள்ளாக்குபவர்கள் தூரத்தில் இருந்து வருபவர்கள் அல்லர். உங்கள்நெருங்கிய உறவினர்கள், நண்பர்களாகவே இருக்கின்றனர். ஆகவே உங்கள் உறவுகள் தொடர்பில் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். வீட்டிலுள்ள பெற்றோர் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும். பெற்றோரின் நடத்ததைக் கோலங்களே பிள்ளைகளின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

பெற்றோர் பிள்ளைகளிடம் அன்பு காட்ட வேண்டும். இன்று அநேகமான பொற்றோருக்குப் பிள்ளைகளிடம் அன்புகாட்டுவதற்கு நேரமில்லை. அதனால் பிள்ளைகள் அந்நியப்படுத்தப்படுகின்றனர். பெற்றோரிடம் கிடைக்காத அன்பு, அரவணைப்பைத் தேடி வேறொருவரிடம் செல்லும்போதே பிள்ளைகள் அதிகளவில் துஷ்பிரயோகங்களுக்குள்ளாக்கப்படுகின்றனர். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் 18 வயதிற்குக் குறைவான பிள்ளைகளில் 65 சதவீதமான பிள்ளைகள் ஏதோ ஒரு வித மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

❖ "நல்லறிவுமிக்க இலக்கியங்களைப் புகட்டுவதன்மூலம் இளையோரை குற்றச் செயல்களிலிருந்து தடுக்க முடியும்" என்று நீதிபதி ஒருவர் கூறியுள்ளார். பெரியோர்கள் தமது பிள்ளைகளுக்கும் இளைஞர்களுக்கும் இலக்கியச் சுவையை ஊட்ட முன்வர வேண்டும். கம்பனது காவியத்தைப் படிக்க வைத்து அதன் மூலம் காவியச்சுவையை உணரச் செய்து இன்றைய இளைய தலை முறையினரைக் குற்றச்செயல்களில் இருந்து தடுத்து நிறுத்த முடியும்.

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறுவதற்காகவே என்று ஆறுமுகநாவலர் பெருமான் கூறியுள்ளார். நாம் கடவுளை அடைவதற்கு ஆன்மீக நெறியினைச் சிறந்தமுறையில் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். கம்பரும், திருவள்ளுவரும் தமிழுக்குச் சிறந்த இலக்கியங்களைத் தந்துள்ளனர். கம்பராமாயணமும், திருக்குறளும் அறநீதிக்கருத்துக்கள் பலவற்றை வலியுறுத்தி ஆன்மீகத்திற்கு எம்மை வழிபடுத்த உதவும் இலக்கியச்சுவை நிறைந்த நூல்களாக விளங்குகின்றன. பண்டைய தமிழ் இலக்கியங்களை இன்றைய இளைய தலைமுறையினருக்கு நாம் அறிமுகப்படுத்த வேண்டும். அவர்களுக்குக் காவியச் சுவையை ஊட்டுவதற்குப் பெரியவர்கள் முன்வர வேண்டும்.

இன்று நாட்டில் வன்முறையும் குற்றச்செயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் அதிகரித்துள்ளன. இவற்றிலிருந்து இளைய தலைமுறையினரை விடுவிக்கவேண்டுமானால் அவர்களுக்கு இலக்கியத்தில் நாட்டத்தை ஏற்படுத்த வேண்டும். இலக்கிய நயத்தை, காவியச் சுவையை அஞ்சலோட்டம் போன்று அடுத்த சந்ததிக்கு கைய ளிக்க அனைவரும் முன்வரவேண்டும் என்று கூறி யுள்ளார்.

❖ "மணவர்களின் கல்வி வளர்ச்சிக்குக் கூட்டுப் பொறுப்புடனான செயற்பாடுகள் மிகவும் அவசிய மாகும்." என்று ஒரு கல்வி அதிகாரி குறிப்பிட்டுள் ளார். "பாடசாலையின் கல்வி வளர்ச்சியில் பெற் றோர்களின் பங்களிப்பு மிக அவசியமாகும். பாட சாலையில் கல்விகற்கும் மாணவர்களின் கல்வி துறை மற்றும் புறக்கிருத்தியச் செயற்பாடுகளில் அதிபர், ஆசிரியர்களோடு இணைந்து பெற்றோர் களும் செயற்படுவதன் மூலம் மாணவர்களின் அடைவு மட்டங்களை அதிகரிக்க முடியும்.

கல்வி மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு உத வுவது போன்று விளையாட்டு மாணவர்களின் உடல், உள வளர்ச்சிக்கு உதவுகின்றது. இவ்விரண்டு திறன்களும் ஒருங்கே ஒரு மாணவனுக்கு கிடைக்கு மாக இருந்தால் அந்த மாணவனின் அடைவுமட்டம் அவனது பாரிய வளர்ச்சிக்கு வித்திடும் என்பதில் ஐயமில்லை.

பாடசாலை அதிபரின் வினைத்திறன் மிக்க செயற்பாடு, திறமையான முகாமைத்துவம் கார ணமாகவும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் வழங் கும் ஒத்துழைப்புக் காரணமாகவும் வளர்ச்சியை எட்ட முடியும். எனவே பாடசாலை அதிபர் , ஆசிரியர் களோடு பெற்றோர்களும் மாணவர்களின் கல்வி மற்றும் புறக்கிருத்திய செயற்பாடுகளிலும் ஆர் வத்துடன் செயற்பட்டால் கல்வி வளர்ச்சியில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்திக்கொள்ள முடியும்" என்று தெரிவித்துள்ளார்.

❖ சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப் புணர்வுக் கூட்டத்தில் ஒரு பொலிஸ் அதிகாரி பின் வருமாறு விளக்கம் அளித்துள்ளார். "ஒரு பிள்ளை யின் முதலாவது பாடசாலை அந்தப் பிள்ளையின் தாயின் மடி. இங்கிருந்து அப்பிள்ளை கற்க ஆரம் பிக்கிறது.

எனவே பெற்றோரின் நல்ல பழக்கங்களே பிள்ளைகளை நற்பிரஜைகளாக உருவாக்குகின் றன. ஆகவே ஒவ்வொரு குடும்பத்திலும் ஒற்றுமை யும் நல்ல பழக்கவழக்கங்களும் மேலோங்கி இருக்க வேண்டும். – என்று தமது அவதானிப்பை முன்வை த்துள்ளார்.

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"

## மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்திற்கு உங்கள் ஆதரவை நல்குங்கள்

இணுவில் வடிவேல் சுவாமிகளால் ஆரம் பிக்கப்பட்ட மகாதேவா ஆச்சிரமம், இன்று 326க் கும் மேற்பட்ட குழந்தைகளை பராமரித்துவரும் காப்பகமாக உள்ளது. பெற்றோரை இழந்து அனாதரவாக இருக்கும் பிள்ளைகள் பலர் பல வகைப் பாதிப்புக்கும் உட்பட்டவர்களாக இருக் கின்றார்கள். அவர்களைச் சிகிச்சைக்காக வைத் தியசாலைக்குக் கொண்டுசென்று வருவதற்கு ஒரு பேருந்து மிக அவசியம் தேவைப்படுவதாக மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தின் தலைவர் திரு.தி.இராசநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார். எனவே இந்தப் பணிக்கு பொது மக்களாகிய உங்கள் ஒவ்வொருவரினதும் ஆத ரவு மிகவும் இன்றியமையாததாக உள்ளது. ஆகவே உங்கள் நன்கொடைகளை மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம், **இலங்கை வங்கி, கிளிநொச்சி வங்கிக்கணக்கு இல: 9991351** இல் வைப்பிலிட்டு ஆதரவு நல் கும் வண்ணம் வேண்டப்படுகின்றீர்கள். ஒரு பொதுப் பணிக்குத் தாராளமாக உதவுங்கள். சிறுதொகை பெரு வெள்ளம்!

### 'முடிவு காண்போம்'

**சுதந்திரம் பெற்ற நாட்டில்
சுகத்தினை விரும்பிநின்று
நிதம்நலம் உழைத்த மக்கள்
நிர்க்கதி யுற்று வாடும்
விதந்தனை இங்குகண்டோம்
வெந்தவர் உள்ள மெல்லாம்
இதம்பெறு நாளெப்போதோ
இதற்கொரு முடிவு காண்போம்!**

**- கவிஞர் பசுபதி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தவையும் தெரிந்தவையும்



★ இங்கிலாந்தில் பிறந்து அமெரிக்காவில் வாழ்ந்த நகைச்சுவை மன்னன் சார்லி சப்ளின் தமது நடிப்பினால் உலகத்தையே கவர்ந்த பெருமைக்குரியவர். சார்லி சப்ளினின் படங்கள் சாதாரண மக்களால் மாத்திரமன்றி, உலகின் பிரபலங்களாலும் விரும்பி இரசிக்கப்பட்டன. வின்சன் சேர்ச்சில், லெனின், ஸ்டாலின், ஜவஹர்லால் நேரு, அடோல்ப் ஹிட்லர் ஆகிய அக்கால உலகத் தலைவர்கள் சார்லி சப்ளினின் இரசிகர்களாகவே இருந்துள்ளனர். ஹிட்லர் சார்லி சப்ளினின் மீசையைப் போன்றே தமது மீசையையும் வைத்துக் கொண்டார். பிற்காலத்தில் சார்லி சப்ளினின் மீசை மறைக்கப்பட்டு ஹிட்லர் மீசை என்றே பிரபலமாகியது. மூலவேர் மறைக்கப்பட்டு பின் வந்தவர் பெயரை (ஹிட்லர் மீசை) தக்க வைத்துக் கொண்டார். என்ன உலகமடா?

16.04.1889 இல் பிறந்த சார்ள்ஸ் ஸ்பென்சர் சப்ளின் வறுமை காரணமாக பலவகையான துயரங்களையும் அனுபவித்தவராக, பாடசாலைக்குச் செல்லாமல் நாடக அரங்குகளை நாடிச் சென்றார். 1910 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவுக்குச் சென்ற நாடகக் குழுவுடன் இணைந்து சென்று அங்கேயே தங்கிவிட்டார். சந்தர்ப்பம் கிடைத்தபடியால் முதலில் ஊமைப் படங்களிலே நடித்தார். 'KID AUTO RACES AT VENICE' என்ற படத்தில் தான் விரும்பியபடி சுதந்திரமாக நடிப்பதற்குச் சார்லி சப்ளினுக்குச் சந்தர்ப்பம் கிட்டியது. எவராலும் மறக்கமுடியாத புதிய ஒப்பனையோடு முதல் முதலில் அப்படத்தில் தோன்றி நடித்தார். இத்திரைப்படத்தின் மூலம் அமெரிக்காவில் மட்டுமல்லாமல் இவரது புகழ் உலகெங்கும் பரவியது. ஊமைப் படங்களில் கொடிகட்டிப் பறந்த சார்லி சப்ளினுக்கு பேசும் படங்கள் அவ்வளவாகக் கைகொடுக்கவில்லை. 1946 க்குப் பிறகு அவரது பேசும் படங்கள் வெளிவந்துள்ளன.

அவரது இறுதிப் படமாகிய A COUNTESS FROM HONG KONG 1967 வெளிவந்தும் வெற்றிப் படமாக அமையவில்லை. ஊமைப் பட மன்னன் பேசும் படத்தில் பிரகாசிக்கவில்லை.

முதலாளித்துவ நாடாகிய அமெரிக்காவில் வாழ விரும்பாத சார்லி சப்ளின் 1952 ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து சுவிட்சர்லாந்து சென்று நிரந்தரக் குடிமகனாகக் குடியேறினார். விசேட அக்கடமி விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுக் கொண்ட இவர் 1975 இல் பிரித்தானிய மகாராணியார் வழங்கிய சேர் (SIR) பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். எல்லோரையும் சிரிக்க வைத்த நகைச்சுவை மன்னன் சார்லி சப்ளின் தமது 88 ஆவது வயதில் 1977 டிசெம்பர் 25 ஆம் திகதி காலமானார் என்ற செய்தி கேட்டு உலகமே துக்கத்தில் ஆழ்ந்தது.

★ இரண்டு பெண்கள் இரண்டு தடவைகள் நோபல் பரிசினைப் பெற்றுள்ளார்கள். ஒருவர் மேரி கியூரி அம்மையார். மற்றவர் அன்னை திரேசா. 2011ஆம் ஆண்டு ஆபிரிக்கப் பெண்கள் மூவருக்கு சமாதா







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. சைபீரியாவின் ஜனாதிபதியான எலென் ஜோன்ஸன் சேர்லீவ், அதே நாட்டவரான லெமஹ் கபோவி மற்றும் யேமனைச் சேர்ந்த த்வாகுல் கர்மான் ஆகியோரே சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்களாவார்.

★ தமிழில் அச்சு வாகனம் ஏற்றப்பட்டு மறைந்து கிடந்த முதல் தமிழ் நூல்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தனி நாயகம் அடிகளார் ஈடுபட்டார். தமது வெளிநாட்டுப் பயணத்தில் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்குச் சென்றபோது, அந்நாடுகளில் உள்ள நூலகங்களுக்குச் சென்று தமிழ் நூல்களைத் தேடும் பணியில் கவனம்கொண்டார். அம்முயற்சியில் அவர் அடைந்த வெற்றியின் பயனாக மறைந்து கிடந்த பல தமிழ் நூல்கள் வெளிச்சத்துக்கு வந்தன.



பதினாறாம் நூற்றாண்டிலும் அதன் பின்னரும் தமிழகத்தில் சமயப் பணியாற்ற வந்த மேனாட்டு கிறிஸ்தவ அறிஞர்கள் சிலர் இயற்றிய நூல்கள் கால வெள்ளத்தால் காணாமல் போய்விட்டன. மறைந்து கிடந்த நூல்களை தனிநாயகம் அடிகளார் தேடிக் கண்டுபிடித்தார். முதன்முதலில் ஐரோப்பியர் ஒருவரால் தமிழ்மொழியில் எழுதப்பெற்ற நூலாகக் கருதப்படும் 'தமிழ் மொழி இலக்கணக் கலை' (1550 ஆம் ஆண்டு) கையெழுத்துப் பிரதியாகவே பெறப்பட்டது.

உலகளாவிய ரீதியில் முதன் முதலில் தமிழ் மொழியில் அச்சேறிய நூலாகக் கருதப்படும் 'கார்த்தில்லா' 1554 ஆம் ஆண்டு வெளிவந்தது. முதன்முதலில் இந்தியாவில் அச்சேறிய தமிழ் நூல்களாகக் கருதப்படும் 'தம்பிரான் வணக்கம்' மற்றும் 'கிரித்தியாணி வணக்கம்' ஆகிய நூல்கள் முறையே 1578, 1579 ஆம் ஆண்டுகளில் அச்சு வாகனம் ஏறின. தமிழ் நாட்டில் முதன்முதலாக அச்சேறிய தமிழ் நூல் 'அவுளஸ் சங்ரோறும்' 1586 இல் வெளிவந்தது. இத்தகைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நூல்களை தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவராகத் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் முதன்மை பெறுகின்றார்.

★ விண்வெளி ஆய்வுத் துறையில் சிறந்த பங்காற்றியதற்காக இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரும் சிறந்த விஞ்ஞானியுமாகிய ஏ.பி.ஜே. அப்துல் கலாமுக்கு அமெரிக்காவின் தேசிய விண்வெளி நிறுவனம் (என்.எஸ்.எஸ்) சார்பாக **'வெர்ன் ஹெர் வான்பிரான் நினைவு விருது'** வழங்கப்பட்டுள்ளது.



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்திலுள்ள சான்டியாகோவில் நடைபெற்ற 32 ஆவது சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மேம்பாட்டுக் கருத்தரங்கில் அவருக்கான விருது அளிக்கப்பட்டது. அந்தச் சந்தர்ப்பததில் "விண்வெளியிலிருந்து சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிப்பது தொடர்பான ஆராய்ச்சிகளை உலகநாடுகள் ஒருங்கிணைந்து நடத்த வேண்டும். இவ்விடயத்தில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபட்டு வரும் பிறநாடுகளுடன் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்" என்ற தமது கருத்தை அப்துல் கலாம் முன் வைத்துள்ளார்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையும் கல்வியும் தீர்வும்

வறுமை காரணமாக ஏற்படும் உணவு ஊட்டக்குறைவு, மூளை வளர்ச்சியைப் பாதிக்கின்றது. புலன் உறுப்புகளின் செயற்பாடுகளைப் பாதிக்கின்றது. வறுமைக்கும் பள்ளிக்கூட வெளி நீங்குகைக்கும், கற்றலில் ஈடுபாடு கொள்ள முடியாமைக்கும் நேரடியான தொடர்புகள் காணப்படுகின்றன. வறுமை கவனச் சிதைவை இலகுவாக ஏற்படுத்தி விடுகின்றது. இன்றைய பாடசாலைக் கட்டமைப்பும் வறிய மாணவர்களிடத்து தாழ்வுச் சிக்கலையும் மனவெழுச்சிக் குழப்பங்களையும் ஏற்படுத்தி விடுகின்றது.

வறுமையாலும் சமூக நிராகரிப்புக்களாலும் இடர் தழுவிய கற்போர் அல்லது ஆபத்து விளிம்பிலுள்ள கற்போரின் எண்ணிக்கையும் பிரச்சினைகளும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. வறுமையின் சூழமைவு கற்றலைப் பாதித்து ஆபத்தின் விளிம்புக்குள் வறியவர்களைத் தள்ளி விடுதல் உண்டு. ஆனால் மேலைத்தேய உளவியல் ஆய்வாளர்கள் வறுமையின் தாக்கங்களை ஒரு பெரும் விசையாகக் கொள்ளவில்லை. சிறப்பார்ந்த கவனத்துக்குரியவர்களை வகைப்படுத்திக் கூறும் பொழுது, வறியவர்கள் கற்றலில் எதிர்நோக்கும் உளவியல் இடர்களை மேலைப்புல உளவியலாளர்கள் பொதுவாக விபரித்துக் கூறுவதில்லை. மூன்றாம் உலகநாட்டு உளவியலாளர்கள் மேலைத்தேய அணுகுமுறைகளில் முற்றிலும் தங்கியிருக்கும் பொழுது கல்வி உளவியலில் வறுமையின் தாக்கங்களை விபரித்துக் கூறாத நிலையில் உள்ளனர்.

வறுமையால் ஏற்படக்கூடிய தாழ்வுச் சிக்கலை முறியடிக்கக்கூடிய உற்சாகம் கலந்த கற்பித்தலைத் தந்து ஊக்கப்படுத்துதல் வேண்டும். மனவெழுச்சிக் குழப்பங்கள் மிகையாகக் காணப்படும் போது மனவெழுச்சி கலந்த கற்பித்தலை மேற்கொள்ளலாம். அவர்களிடத்துக் காணப்படும் கோபம், ஆத்திரம், பயம் முதலிய மனவெழுச்சிக் குழப்பங்களைப் பரிவுடன் அணுகி, நிதானத்தையும் நம்பிக்கையையும் வளர்த்தல் வேண்டும். தலைமைத்துவப் பொறுப்புக்களை அந்த மாணவர்களுக்கு வழங்கி தன்னம்பிக்கைளையும் எழுச்சியையும் ஏற்படுத்துதல் வேண்டும். கல்வி வாயிலான மீட்சியை அவர்களுக்கு உணர்த்திப் பல தள ஊக்கல் முயற்சிகளை முன்னெடுப்பதன் வாயிலாக ஆபத்து விளிம்பிலுள்ள அத்தகைய கற்போரை மீட்டெடுக்க முடியும். கல்வியால் நிமிர்நிலை சமூக அசைவியக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதை உணர்த்துதல் வேண்டும்.

இடர் தழுவியோர் கற்கும் வலுவில் பின்னடைவுடையோர் என்ற காரணத்தால் அவர்களைப் புறக்கணித்தல் அடிப்படை மனித உரிமைகளைப் புறக்கணித்தலாகும் என்ற கருத்தின் வலிமை, தொழிலாளர்களதும், ஒடுக்கப்பட்டோரதும் எழுச்சியுடன் தொடர்புடையதாக அமைந்தது. வறுமை காரணமாக உணவு ஊட்டம் பாதிக்கப்படுதலும், அவற்றால் உடல் சார்ந்த ஆற்றல்கள் தாக்கங்களுக்கு உள்ளாவதும், வறியவர்கள் மத்தியில் ஒப்பீட்டளவில் மேலோங்கியிருந்தன. மூன்றாம் உலக நாடுகளின் தேசிய எழுச்சிக் கோலங்களோடு தொழிலாளர் மத்தியிலும்,வறியவர்கள் மத்தியில் ஏற்பட்ட எழுத்தறிவுப் பலம் அவர்களைப் புதிய சிந்தனைகள் கொண்ட மனிதர்களா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத் தெறிப்படையச் செய்ய உதவிற்று. கற்கும் வலுவிலுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் கடந்து அனைவருக்கும் கல்வியிற் சம சந்தர்ப்பம் வழங்கவேண்டும் என்பது தேசிய நிலைப்பட்ட கவன ஈர்ப்பை பெற லாயிற்று.

உலகளாவிய முறையில் ஊடுருவிய மார்க்சிய சிந்தனைகள் விலகல் வேறுபாடின்றி அனைவருக்கும் கல்வியிலே சம சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் கருத்தியலை வலியுறுத்தியது. இதற்குச் சமாந்தரமாகக் கல்வி உளவியலில் ஏற்பட்ட முன்னேற்றகரமான ஆய்வுகள் இடர் தழுவிய கற்போருக்கு துணை நிற்கும் வழி வகைகளையும் நுட்பவியல்களையும் கண்டறியலாயின. இடர் தழுவியவர்களுக்கான கல்வி ஏற்பாடுகள் 'சிறப்பார்ந்த கல்வி' என்ற வகையில் உயர்ந்த நிலையான கவன ஈர்ப்பைப் பெற்றமை மக்களாட்சி நிலைப்பட்ட கல்விச் சிந்தனைகளின் வெளிப்பாடாகும்.

**மார்க்சிய, நவமார்க்சிய உளவியல் ஆய்வுகள் பற்றிய தகவல்கள் எமது நாட்டில் உள்ளோருக்குப் போதிய அளவிலே கிடைக்கப்பெறாமையால், வார்ப்பு நிலையான மேலைத்தேய அணுகுமுறைகளே எங்கள் மத்தியில் மேலோங்கியுள்ள நிலையில் புதிய தொடுவானங்களை எட்டமுடியாமல் இருக்கின்றது.**

உள்நாட்டு யுத்தத்தாலும், வறுமையாலும், துன்பங்களாலும் பீடிக்கப்பட்டுள்ள எமது நாட்டில் ஆபத்து விளிம்பிலுள்ள கற்போர் பற்றித் தீவிர கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அடிப்படையான சமூகக் கட்டுமானத்தின் மீது கவனம் செலுத்தாது, மேலைத்தேய உளவியலாளர்கள் போன்று தனித்து உளவியல் பண்புகள் மீது மட்டும் கவனம் செலுத்துதல் ஒரு வகையில் ஏமாற்று வித்தையாகவே அமையும். சமூக பொருளாதாரக் கட்டுமானத்தைத் திறனாய்வு செய்தல், பலவகையிலும் நிகழும் சுரண்டல் விசைகளை மாணவர்களுக்கு உணர்த்துதல், சுரண்டல் விசைகளுக்கு எதிரான உளத்திட்டத்தையும் வினைப்பாடுகளையும் மாணவர்களிடத்து வளர்த்தல் வாயிலாக அவர்களை ஆபத்து விளிம்பிலிருந்து காப்பாற்ற முடியும். தெளிவான சுயபடிமத்தை வளர்ப்பதற்கும், தெளிந்த நல்லறிவை வளர்ப்பதற்கும் கல்விச் செயல்முறைகளை மீள் ஒழுங்குபடுத்தலே சிறந்தது. உடல் மேம்பாடு, உள மேம்பாடு, மனவெழுச்சி மேம்பாடு முதலியவற்றுக்குரிய தொடர் நடவடிக்கைகளைக் கலைத்திட்டத்திலே முன்னெடுத்தல் வேண்டும்.

முதலாளித்துவ சுரண்டற் கட்டமைப்புடன் இணைந்த கல்வி முறைமை வறிய மாணவர்களைத் தொடர்ந்தும் வறுமையில் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றது. வறிய பொற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் தொடர்ந்து அக்கறையற்றிருக்கும் நிலையானது பொருளாதார இடர்களினால் தொடர்ந்தும் நீடித்துக் கொண்டிருக்கிறது.

ஒரே பாடசாலையில் வறிய மாணவரும் நடுத்தர வர்க்கத்து மாணவரும் கற்றுக் கொண்டிருக்கும் பொழுது நிகழும் போட்டிகளும் ஊக்குவிப்புக்களும் வறிய மாணவர்களுக்குத் தொடர்ந்து பாதகமாகவே அமைந்து வருகின்றன. வறிய பெற்றோர்கள் பள்ளிக்கூட வள மேம்பாட்டிலே பற்குபற்றலும் அரிதாக இருப்பதால் அவர்கள் தொடர்பான கணிப்பிலும் பின்னடைவுகள் காணப்படுகின்றன. பள்ளிக்கூடக் கட்டமைப்புகளிலே காணப்படும் தர வேறுபாடுகளும் வறிய பிள்ளைகளுக்கு பாதகமாகவே அமைகின்றன. கட்டமைப்பு வசதிகள் மேலோங்கிய பள்ளிக்கூடங்களுக்கு ஏழைச்சிறார்கள் நுழைய முடியாமலுள்ளது. ஒருவாறு நுழைந்தாலும் அங்கு காணப்படும் போட்டி நிரல்களும் அந்தஸ்து நிரல்களும் அவர்களை வெளிவீசச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து விடுகின்றன.

**உயர்கல்வி நிலையிலும் சமூக நிலையிலும் ஒரு சிலரை உயர்த்துவதற்கும் அவர்களின் நலன்களைக் கல்வி வழியாக கட்டிக் காப்பதற்குமான வெளித்தோன்றாத தொழில்சாலைகளாகப் பள்ளிக்கூடங்கள் இயங்கி வருகின்றன.**

தனித்தனி மாணவர்கள் மீது இடையறாத கவனம் செலுத்தி ஒவ்வொருவரையும் முன்னுக்குக் கொண்டுவர முடியாத பலவீனமான நிலையில் பள்ளிக்கூடங்கள் இயங்குகின்றன. 'பொதுநிலைப்படுத்திய' கற்பித்தல் முறைமை, மதிப்பிட்டு முறைமை முதலியவை உடனடியான மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படவேண்டியுள்ளன.

பள்ளிக்கூடங்களில் எவை கற்பிக்கப்படவில்லையோ. அறிவு மற்றும் தொழில்நுட்பத் தொகுதிகளில் எவை சேர்க்கப்படவில்லையோ, எவை கற்பிக்கப்படாது ஒதுக்கி விடப்பட்டுள்ளனவோ அவற்றை மதிப்பீடு செய்யும் திறன் வளர்க்கப்படாதிருத்தல் **இன்றைய கல்விச் செயல்முறையின் கரும் புள்ளியாக இருக்கின்றது.** ஆற்றல் கண்டறியப்படாது ஒதுக்கிவிடப்படும் மாணவர் கள், திறமை கண்டறியப்படாது ஒதுக்கி விடப்படும் ஆசிரியர்கள் முதலியோர் மீது கவனம் செலுத்தப்படுவதில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டு வருகின்றன. இலவசக் கல்வி நடைமுறையில் செயலிழக்கத் தொடங்கியுள்ளது. சட்டபூர்வமான முறையில் கட்டணங்கள் அறவிடப் படுவதற்குரிய சிந்தனைகள் வாய்ப்புமிக் கோரிடம் தலைதூக்கி வருகின்றன.வாய்ப்பு மிக்கோரே கல்விக்குரிய தீர்மானங்களை உருவாக்குவோராயும் செயற்படுத்துவோராயும் இருப்பதனால் கல்விச் செயல் முறையானது சமூகச் சமமின்மையை மீள்உற்பத்தி செய்துகொண்டிருக்கின்றது.

ஒடுக்கப்பட்டோர், நிராகரிக்கப்பட்டோர் முதலியோருக்கான கல்வி வாய்ப்புக் களையும் ஏற்பாடுகளையும் நடப்பியற் பண்பு தழுவி விரிவுபடுத்துவதுடன், எதிர்மறையானதும் தவறான விழுமியங்களை உள்ளடக்கியதுமான கல்விசார் உளப்பாங்குகளை மாற்றியமைத்தல் வேண்டும். எத்தகைய தொழில்களைச் செய்வோரும் தொடர்ந்து கற்றுக்கொள்ளவும் தமது ஆளுமையை வெளிப்படுத்திக்கொள்ளவும் தமது படைப்பு மலர்ச்சியை ஏற்படுத்தவும் வல்ல அகல் விரி பண்புடைய கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்தலும், நவீன விஞ்ஞானம், நவீன தொழில்நுட்பம், நவீன கலையாக்கங்கள் தொடர்பான தொடுவானங்களை எட்டுவதற்கும், அறிவின் முன்னரங்கத்தை மேலும் முன்னோக்கி அசைப்பதற்கும் தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். எவ்வித சுரண்டலற்றலும் தன்னல முயற்சியால் பிறர்பாதிப்புக்கு உள்ளாகாமல் இருப்பதற்குமான கட்டமைப்புகளை வலுப்படுத்துவதுடன் மனித மாண்புகளையும் உயர்ந்த விழுமியங்களையும் செயற்படுத்தும் இயங்குநிலையை உருவாக்கவும் கூடிய புத்தாயிரம் ஆண்டுக்கான கல்விச் செயற்பாடுகளில் கவனம் குவியப்பட வேண்டும். கல்வி எல்லோருக்கும் பொதுவானது என்ற இயங்கு நிலைவாதம் முன்னெடுக்கப்படும் போதுதான் எல்லோரும் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். ●

**- தேடலோன்**

**KULENDRAN IMMIGRATION LAW CHAMBERS**



90,High Street,
Colliers Wood
London SW19 2BT

Tel : 0 208 542 8222
Tel : 0 208 682 4494
Mobile : 0 776 918 5592
Fax : 0 208 542 8666
e mail : kilc_work@yahoo.co.uk
www.vkimmigration.co



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சி

இன்று மக்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப் பயன்படும் இலக்கிய வகையாகச் சிறுகதை விளங்குகின்றது. இத்துறையானது காலந்தோறும் பல்வேறு அரசியல் பொருளாதாரச் சமுகச் சூழல் காரணமாக மாற்றம் கண்டு செம்மையும் பொலிவும் பெற்று வளர்ந்துள்ளது.

ஈழத்தில் சிறுகதை இலக்கியம் இன்று தனிச் சிறப்புப்பெற்று மிளிர்கின்றது. சிறுகதைத் தொகுதிகள் நாளுக்கு நாள் வெளிவந்த வண்ணமுள்ளன. வார இதழ்களும் சிற்றிதழ்களும் சிறுகதைகளை விரும்பிப் பிரசுரிக்கின்றன. இந்நிலையில் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியினைச் சிறிது நோக்குவோம்.

1930ஆம் ஆண்டளவில் ஈழத்திலும் சிறுகதை இலக்கியம் தோன்றுவதற்கான சூழ்நிலை உருவாயிற்று. மேலை நாட்டு எழுத்தாளர்களின் படைப்புகளின் தாக்கம் இத்தகைய சூழ்நிலையினை உருவாக்கியது. ஈழத்துச் சிறுகதை இலக்கிய முன்னோடிகள் - மூலவர்களெனப் போற்றப்படும் சி.வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன் ஆகியோரின் கதைகள், 'கலைமகள்', 'கிராம ஊழியன்' ஏடுகளில் வெளியாயின.

இவர்களது கதைகளில் தமிழ்நாட்டு எழுத்தாளர்களான கு.ப.ரா. பிச்சமூர்த்தி, சிதம்பர சுப்பிரமணியன், மௌனி ஆகியோரின் நேரடித் தாக்கமும் மேலைநாட்டுச் சிறுகதைகளின் பாதிப்பும் காணப்பட்டன. எனினும் ஈழத்து மண்வாசனையும் கிராமிய மக்களின் வாழ்க்கையின் சித்தரிப்பும் பெருமளவு பிரதிபலித்தது.

1940 தொடக்கம் 1950 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஈழத்தில் சிறுகதை எழுத்தாளர்கள் பலர் உருவாகினர். இலக்கியமும் சமூக சீர்திருத்தமும் புதியதோர் சமூகத்தை உருவாக்கவும் பயன்படவேண்டும் என்ற இலட்சிய வேட்கையுடன் இவர்கள் தமது படைப் புகளை வெளியிட்டனர். பிரதேச மண்வாசனையுடன் கூடிய சிறுகதைகள் பல உருவாகின. இக்காலகட்டத்தில் ஈழகேசரியின் பங்களிப்பு சிறுகதை வளர்ச்சிக்கு உதவியது. ஆரம்பகால எழுத்தாளர்களுக்கு 'ஈழகேசரி' களம் அமைத்துக் கொடுத்தது.

அ.செ.முருகானந்தன், அ.ந.கந்தசாமி வ.அ.இராஜரத்தினம், வரதர், கனகசெந்திநாதன், சொக்கன், சு.வேலுப்பிள்ளை (சு.வே), கா.சிவகுருநாதன், சு.நல்லையா, தாளையடி சபாரத்தினம், சு.இராஜநாயகம் போன்றோர் இக்காலகட்டத்து சிறந்த எழுத்தாளர்கள். தமிழகத்தில் மணிக்கொடிக்காலம் போன்று ஈழத்தில் இக்காலத்தை மறுமலர்ச்சிக் காலம் எனக் கூறுவர். 1945 ஆம் ஆண்டில் ஆரம்பமான 'மறுமலர்ச்சி' புதிய பல எழுத்தாளர்களை மட்டுமன்றி புதிய பல கருத்துகளையும் அறிமுகப்படுத்தியது.

மறுமலர்ச்சி காலத்திற்குப் பிந்திய காலப்பகுதிச் சிறுகதைகளில் யாழ்ப்பாணம வெறும் களமாக மாத்திரம் அமையவில்லை. யாழ்ப்பாணத்து வாழ்க்கைப் பிரச்சினைகள் இவர்களது சிறுகதைகளில் பெருமளவில் பேசப்பட்டன என பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிட்டுள்ளமை இங்கு கருத்தில் கொள்ளத்தக்கது.

ஈழத்தில் 1956இல் ஏற்பட்ட அரசியல் மாற்றம் தமிழ் இலக்கியத் துறையில் பாரிய மாற்றத்தை உருவாக்கியது. 1956 – 1960ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டம் ஈழத்துத் தமிழ் சிறுகதை வளர்ச்சியில் முக்கியமானதோர் திருப்புமுனையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தது. முற்போக்கு எழுத்தா ளாகள் முனைப்புடன் எழுதலாயினர்.

இக்காலகட்டத்தில் 'வீரகேசரி', 'தினகரன்', 'சுதந்திரன்', 'தேசாபி மானி' போன்ற பத்திரிகைகள் ஈழத் துச் சிறுகதை வளர்ச்சிக்கு ஊக்க மளித்தன. 'சுதந்திரன்' புதிய எழுத் தாளர் பலரை அறிமுகப்படுத்தியது. சிறுகதையின் உருவ, உள்ளடக்க அடிப் படையில் விரிவான சோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சமூகப் பொருளாதார அடிப்படையி லான முரண்பாடுகளின் விளைவு களைச் சித்திரிக்கும் வகையில் சிறு கதைகள் பல வெளியாயின. இக் காலப் பகுதியில் சிறுகதைகள் உரு வம், உள்ளடக்கம் ஆகியனவற்றில் ஒப்பீட்டளவில் முன்னைய பரம்பரை யிலிருந்து வேறுபட்டிருந்தன.

இருபதாம் நூற்றாண்டின் இறு திப் பகுதியில் பல்வேறு சிறுகதைத் தொகுப்பு நூல்களும் வெளியாகி யுள்ளன. 'மறு மலர்ச்சி' சிறுகதை களின் தொகுப்பு, 'ஈழகேசரி' சிறு கதைகளின் தொகுப்பு என்பன குறிப் பிடத்தக்கன. சுருங்கக் கூறின் தமிழ் நாட்டுச் சிறுகதை எழுத்தாளர்களை விட ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர் களின் படைப்புக்களில் சமுதாயப் பார்வை கூர்மை பெற்று விளங்குகின் றது எனலாம். இத்தகைய ஆரோக் கியமான சூழ்நிலையில் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி பெருமைப் படத்தக்க வகையில் அமைந்துள் ளது.

**மெ.டனுஜா,**
**10B,**
**யா/ இராமநாதன் கல்லூரி.**

# இயற்கையில் அன்பு

அனபு என்பது நெருக்கமான உள்ளப் பிணைப்பு தொடர்பான ஓர் உணர்வும் அனுபவமும் ஆகும். அன்பு என்ற சொல்லை ஆங்கிலத்தின் "Love" என்ற சொல் லுக்கு இணையாகக் கருதினாலும் "Love" எனும் சொல் குறிக்கும் எல்லாப் பொருளையும் அன்பு என்னும் சொல் குறிப்பதில்லை. "Love" என்பதற்கு ஆங்கிலத்தின் பல பொருள்கள் உள்ளன. பொதுவாக ஒரு பொருள் அல் லது செயலின் மீது உள்ள விருப்பம் ( நான் பாயாசம் "விரும்பி" உண்பேன். அதுவும் ஆங்கிலத்தில் "Love" வைக் குறிக்கும். இருவரிடையே காணப்படும் பொது வான அன்பு, மிக நெருக்கமான "காதல்" உணர்வு வரை பல பொருள்களில் அச்சொல் பயன்படுத்தப்படுகின்றது.

அன்பு என்ற சொல்லுக்குரிய உணர்வும் எண்ணக் கருவும் தமிழில் தனித்துவமானது எனலாம். இவ்வாறு மொழிகளிடையே "அன்பு" என்னும் பொருள் தரக் கூடிய சொற்கள் குறிக்கும் உணர்வுகள் பலவாறான வேறுபாடு களை கொண்டவையாக இருப்பதால் அன்புக்கு உலகம் தழுவிய வரைவிலக்கணம் ஒன்றைக் கொடுப்பது கடினமானது.

தமிழிலும் அன்பு உணர்வு பல்வேறு மட்டங்களில் வெளிப்படுவதை காணலாம். தாய் மீதான அன்புக்கு சிறப்பான இடம் உண்டு. அன்பு அதன் பல்வேறு வடி வங்களில் மனிதர்களிடையேயான தொடர்புகளை வலுப் படுத்தும் ஒரு காரணியாக உள்ளது. அத்துடன் அன்பின் உளவியல் தனித்துவம் காரணமாக ஆக்கக் கலைகளில் அது ஒரு முக்கியமான கருப்பொருளாக ஆளப்படுகிறது.


மதராஸ் பல்கலைக்கழகத்தின் தமிழ் அகராதி அன்பு எனும் சொல்லுக்கு "தொடர்புடையார் மாட்டு உண்டாகும் பற்று" எனப் பொருள் தருகிறது. இதில் இருந்து அன்பு என்பது பெற்றோர், மனைவி, பிள்ளைகள். பிற உற வினர், நண்பர்கள் என்று பல வகைப்பட்டோர் மீதும் கொள்ளும் பற்று அன்பு என்னும் சொல்லால் குறிக்கப் படுவதை அறியலாம். அது மட்டுமன்றி உலக மக்கள் அனைவரிடமும் எல்லா உயிரினங்களிடத்து மட்டுமன்றி எவ்வுயிர்களிடத்தும் கொள்ளக்கூடிய பற்று ஒன்றாகிறது. திருக்குறள் அன்பைப் பற்றி பேசும் போது அதனை "அகத்துறுப்பு" என்கிறது. இதன் மூலம் பண்டை தமிழா் அன்பை உடலின் ஓர் உறுப்பாக கருதினர்.

**ர.கபிலமி,**
**யா/ இராமநாதன் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விபுலானந்த அடிகள்



விபுலானந்த அடிகள் மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பிலே காரைதீவு என்னும் ஊரிலே 1892 ஆம் ஆண்டு பிறந்தார். அவருடைய தந்தையார் சாமித்தம்பியும் தாயார் கண்ணம்மையாரும் ஆவர். அவருடைய இயற்பெயர் மயில்வாகனன். அவர் தமிழ், ஆங்கிலம், ஆரியம் ஆகிய மொழிகளில் புலமையும் இலத்தீன், மலையாளம், சிங்களம் ஆகிய மொழிகளில் அறிவும் பெற்றிருந்தார். அவர் பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியராகவும் விஞ்ஞானப் பட்டதாரியாகவும் தமிழ்ப் பண்டிதராகவும் விளங்கினார்.

விபுலானந்த அடிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், திருகோணமலை ஆங்கிலக் கலாசாலையிலும், மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலும் தலைமை ஆசிரியராக கடமையாற்றினார். அவர் தென் இந்தியாவிலுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், இலங்கை பல்கலைக்கழகத்திலும் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அவர் எழுதிய நூல்களில் 'யாழ் நூல்', 'நாச்சியார் நான் மணிக்கோவை' என்பன சிறந்தவையாகும். அடிகளார் நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். விபுலானந்த அடிகள் பலநூல்களை மொழிபெயர்ந்துத் தமிழைச் சிறப்படையச் செய்தார்.

மொழிபெயர்ந்த நூல்கள் கருமயோகம், ஞானயோகம், விவேகானந்த ஞானதீபம், நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை, விவேகானந்தர் சம்பாசணைகள் ஆகியவை ஆகும். இவர் வங்கக் கவிஞர் ரவீந்தரநாத் தாகூரின் 'கார்டனர்' என்னும் நூலிலுள்ள பாடல்களை 'பூஞ்சோலைக் காவலன்' என்னும் பெயரில் அழகு தமிழில் மொழி பெயர்த்துள்ளார். அடிகளார் ஆற்றிய தமிழ் தொண்டுகளில் இசைத்தமிழ் நூலாகிய யாழ்.நூலை ஆக்கி அளித்தமையே சிறந்ததாய்த் திகழ்கின்றது. யாழ். நூலானது பழந்தமிழ் இசை மரபிற்கு புத்துயிர் அளிக்கும் நூலாக விளங்குகின்றது.

நாடகத் தமிழ் வளர்ச்சிக்கும் அடிகளார் தமது பங்களிப்பை செய்துள்ளார். ஆங்கிலம், ஆரியம் போன்ற மொழிகளில் அடிகளார் கொண்டிருந்த புலமை "மதங்க சூளாமணி" என்னும் நாடகத் தமிழ் நூலின் ஆக்கத்திற்கு உதவிற்று. அவர் 1922 ஆம் ஆண்டு துறவு பூண்டு 1924 ஆம் ஆண்டு சித்திரை மாத பௌர்ணமியில் குருதீட்சை பெற்றுத் துறவியானார். அதன் பின்னரே சுவாமி விபுலானந்தர் என அழைக்கப் பெற்றார்.

சுவாமி விபுலானந்தர் தமது வாழ்நாள் முழுவதும் தமிழுக்கும், சமயத்துக்கும் தொண்டாற்றி 1949 ஆம் ஆண்டு ஆடி மாதம் 19ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

**சு.பரத்ராஜ்,**
**யா/ இராமநாதன் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பூப்பும் பறிப்பும்



**நவஜோதி ஜோகரட்னம்**
**லண்டன்.**

திருமணமாகி ஐந்து வருடங்களாகக் காத்திருந்து கிடைத்த அழகான அருமை மகள். அக்குழந்தை மார்பில் வாய் புதைதுக் கொடுத்த வலிகள் இன்னும் மாறாது எடையற்ற மலர்களாக அந்தத் தாயுள்ளம் விரிவதுண்டு. இப்போது வயது ஒன்பது ஆரம்பித்திருக்கிறது அக்குழந்தைக்கு.

பாடசாலைக்கு கூட்டிச்செல்வது மட்டுமல்ல, சனிக்கிழமைகளில் இங்குள்ள தமிழ் பாடசாலைகளில் பரதநாட்டியம், வீணை போன்ற கலைகளையும் தன் குழந்தைக்கு கற்றுக் கொடுப்பதற்காக ஓய்வின்றி அலைந்து கொண்டிருப்பவள் அந்தத்தாய்.

'மம், வெயர் இஸ் மை ஸ்கூள் ரை?', 'என்ர வைற் சொக்ஸை காணவில்லை' என்று ஒரு பிரச்சனை எழுப்பித்தான் காலையில் பாடசாலைக்கே புறப்படுவாள். எல்லாவற்றையும் உற்சாகத்தோடும், ஆர்வத்தோடும் தேடி எடுத்துத் தயார் செய்து பாடசாலைக்கு அழைத்துச் செல்வதில் பெருமிதம் அடைவாள் அந்தத் தாய்.

“செல்வக் குஞ்சு பள்ளிக்கூடத்தால் வந்தால் எல்லாவற்றையும் அவற்றிற்குரிய அந்தந்த இடத்தில் ஒழுங்காக வைத்துப் பழக வேண்டுமடா செல்லம். அப்படி வைத்துப் பழகினால் ஒன்றும் தொலையமாட்டாது. சின்ன குட்டிப்பெண்பிள்ளைப் பெண்ணெல்லோ! பிள்ளைக்கென்று தனியான சின்ன அறை இருக்குத்தானே! உடுப்புகளை கூட அடுக்கி எல்லாம் ஒழுங்காக வைத்துப் பழக வேண்டும் கண்ணா!” என்று,தான் கன்னியர் மடத்தில் படிக்கும்போது சிஸ்டமார் சொல்லிக்கொடுத்தவற்றை அப்படியே சொல்லுவாள் அம்மா.

தன் அருமை மகள் பிறந்த நாள் தொடக்கம் குளிப்பாட்டும் தொட்டியில் அவளை குளிப்பாட்டி, குளிர்படாமல் அணைத்து வைத்திருப்பதும், வீட்டில் மின்சாரத்தில் இயங்கும் கீற்றரைப் போட்டு சூடாக வைத்திருந்து, வாசம் நிறைந்த ஒடிக்கொலோனை பஞ்சுகளால் ஒத்தி எடுத்து காது, மூக்கு ஈரங்களை தடவி எடுத்து குளியலை ஒரு பரவசமூட்டும் பகிர்தலாககிவிடுவாள் அந்தத் தாய். அவள் வளர்ந்து வரும் ஒவ்வொரு வயதும், அவள் சம்பந்தப்பட்ட எந்த ஒரு விடயமும் இனிய நாட்களாகி ஒரே பரபரப்புத்தான் அம்மாவுக்கு.

லண்டனில் பார்த்தால் பிள்ளைகள் கிடுகிடுவென்று விரைவாக வளர்ச்சி அடைந்து விடுகின்றார்கள். உணவுவகைகளின் வித்தியாசங்கள் முக்கியகாரணம் என்றுதான் எங்கட கண்டுபிடிப்பு. தனது மகளுக்கு வயது ஒன்பதாக இருந்தாலும் அவளின் உடலில் மாற்றங்கள் அப்பட்டமாகத் தென்பட்டுக்கொண்டிருந்தது. அறிவிலும், உடலிலும் அவளில் பெருமளவில் மாற்றங்களை அவதானிக்க முடிந்தது. உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடிய அழகிய சிலையாக தாயுள்ளத்தில் அச்சிறுமி மலர்ந்தாள்.

ஷாம்போ நுரை தலையில் பூக்க மெதுவாகக் கோதியபடி 'கண்ணை மூடிக்கொள் செல்லம்' என்று அவளுக்கு மூச்சு முட்டிவிடுமோ என்ற ஒருவித பயத்தில் ஒரு கையை சிறுகுடையாகக் குவிய வைத்து ஷவரைத் தலையில் பிடித்துத்தான் தலையில் குளிப்பாட்டுவாள். 'இங்கேயெல்லாம் சோப் போட்டு நல்லாக ஊத்தைகள் போக குளிக்கவேண்டும்' என்று அம்மாவின் கை விரல்கள் பிள்ளையின் உடல் பூராகவும் பரவும். தனது செல்ல மகளின் இளமார்பையும், குட்டிவயிற்றையும், அவதானித்த அம்மாவிற்கு மகிழ்ச்சியைக் கொடுத்தபோதும், இன்னும் விபரம் புரியாத சிறுபிள்ளைதானே என்ற ஒருவித பயமும் அவளுள் சிதறிச் சித்திரமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ கூற நினைத்தவள் எதுவுமே கூறாது தனக்குள் சிரித்துக்கொண்டாள் அம்மா... எங்கட செல்லம் இப்ப பெரிய ஆளாக வளர்ந்து கொண்டிருக்கிறாள். ஓ.. விரைவில் கொண்டாட்டம் ஒன்று வரஇருக்கிறது என்று மட்டும் சொல்லிச்சிரிக்க...

அவள் கொஞ்சம் வெட்கப்பட்டு அம்மாவின் கையைத் தட்டிவிடுவாள். அங்கால போங்க மம்மி.

இது பெண்கள் எல்லாருக்கும் இருக்கிறது தான். மம்மிக்கு, அன்ராவுக்கு, அம்மம்மாவுக்கு, உன்ர நண்பியின்ர மம்மிக்கு...

அப்போ எப்ப மம்மி எனக்கு அப்படி வரும்?

என்றைக்கோ ஒருநாள் வரும். நீங்க இப்ப குட்டிப் பெண்பிள்ளை தானே!

வந்தால் எனக்கு ராதா அக்கா மாதிரி வடிவான சாறி உடுத்தி கனக்க நகைகள் எல்லாம் போட்டு ஆட்களைக் கூப்பிட்டு செலிபிறேற் பண்ணுவீங்களோ?

என்னடா குஞ்சு இப்படிக் கேட்கிறீங்க... பிள்ளைக்கு செலிபிறேற் பண்ணாமல்... ஊரில இருக்கிற அம்மப்பா ஒரே பிள்ளையின்ர கொண்டாட்டத்தை பார்க்கவேண்டுமென்று ஆவலோடு போனில் பேசுவார். உங்களுடைய அன்ரிமார், மாமாமார் அதாவது அவருடைய எல்லாப் பிள்ளைகளும் வெளிநாட்டுக்குப் போட்டார்கள் என்று தனிய கவலையோடுதான் இருக்கிறார்.

அப்போ அம்மம்மா எங்கே மம்மி?

அம்மம்மாவை சுனாமி வந்து இழுத்துக் கொண்டுபோட்டுதடா குஞ்சு.

அப்போ அம்மப்பா தனியவோ சிலோனில இருக்கிறார்? பாவம் அம்மப்பா.

எந்தத் தடயத்தையும் விட்டுவைக்காமல் தன் தாயைக் விழுங்கிய மரணத்தை நினைத்து திடீரென மௌனமானாள் அம்மா....

லண்டனில் போட்டி போட்டுக் கொண்டு வாராவாரம் கலைநிகழ்ச்சிகள் நடாத்தி கலைகளை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். அது நல்ல ஆரோக்கியமான விடயம்தான். கலை அரங்கேற்றங்களும் போட்டி போட்டு அளவுக்கு மீறிய ஆடம்பரங்களோடும், பணச் செலவுகளோடும் செய்கின்றார்கள். பிறந்த நாள், திருமணக் கொண்டாட்டங்களுக்குக் கூடக் குறைவில்லை. பருவமெய்துவது கூட இப்போது கட்டாய ஆடம்பரக் கொண்டாட்டமாகிவிட்டது. சிவப்புக் கம்பளம் விரித்து, வயது வந்த பெண்பிள்ளையை 'பல்லக்கில்' தூக்கிச் சென்று வசதிபடைத்த அயல்நாட்டில் கொண்டாடியதைப் பார்த்த நண்பி இவளுக்கு வியப்புடன் கூறியது வினோதமாகத் தெரிந்தது. ஆனால் தனது ஒரே மகளின் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்பது மட்டும் இப்போது அவளுள் சித்திரமாகி மிதந்து வந்தது.

தைப்பொங்கலன்று அவள் வீட்டிலும் பெரியபொங்கல்விழா நடந்துகொண்டிருந்தது. சிறுமியாக இருந்த பெண் இப்போ வயதிற்கு வந்துவிட்டாள். அவள் எதிர்பார்த்திருந்த புதுமலர்ச்சிப் பருவம் அடைந்துவிட்டாள். மிதந்து மேலேறும் நினைவுகள் வந்து திக்கற்றுப் பரவிக்கொண்டிருந்தது அந்தத் தாயின் உள்ளத்தை....

உடலில் ஏற்படும் அத்தனை வலிகளையும் அச்சிறுமி தன் தாயிடம்தான் மனம்விட்டுக் குழந்தைபோல் கூறுவாள். மம்மி நான் பாடசாலைக்குப் போக வேணும். எத்தனை நாட்களுக்கு இப்படி வீட்டில் இருக்க வேணும்? ஸ்கூல் வேலைகள் எல்லாம் கனக்க மிஸ் பண்ணப் போறன் மம்மி....

இல்லையடா கண்ணா முதற்தரம் வரும் போது நாம் மிகவும் கவனமாக உடம்பைத் தேற்றிக் கொள்ள வேண்டும். உடம்பு வலி குறையத் தொடங்கும்போது ஸ்கூலுக்குப் போகலாம். என்னடா செல்லம். இரண்டு கிழமையால ஸ்கூலுக்குப் போகலாம். எதற்கும் ஸ்கூல் பாக்கில் நாப்கின் எப்பவும் பாதுகாப்பாக வைத்து விடுவேன். அப்படி ஏதும் உபயோகிக்கவேண்டி வந்தால்.... நான் சொல்லித் தந்தபடி..ம்.. ம் என்னடா செல்லம்?

சில மாதங்களின் பின் குளிர் கொஞ்சம் குறைந்து வெய்யிலும் வரும்போது பெரிய கொண்டாட்டமாகச் செய்வோம். அதற்கிடையில் எல்லா ஆயத்தங்களையும் செய்ய வேண்டும். முக்கியமாக அம்மப்பாவை இந்தச் சாட்டைக் காரணங்காட்டி இலங்கையிலிருந்து இங்கு கூப்பிடவேண்டும்.

தான் பிறந்து வளர்ந்து இதுவரை நேரில் பார்த்திருக்காத அம்மப்பாவின் வரவை சிறுமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. இருந்தும் அம்மாவின் அதீத பரபரப்பைப் பார்த்த சிறுமி யின் முகம் பூத்துக் குலுங்கும் ரோஜாப் பூவைப் போல் சிரிப்பில் மலர்ந்துகொண்டிருந்தது.

O O O

தாம்பாளங்களில் வெள்ளைக் கண்ண றைத் துணிகளால் மூடப்பட்டிருந்த பல வகை யான பலகாரங்கள். மஞ்சள், குங்குமம், பழங்கள், நெய்யும் சீனியும் சேர்த்துச் செய்த அரிசிமா உருண்டைகள், உழுத்தம்மாக் களி, பூத்தட்டுக்கள், குத்துவிளக்குகள் போன்ற அலங்கரித்த தட்டுக்களையெல்லாம் பூப்பு நீராட்டுவிழாவிற்கு வர்ணப் பட்டாடைகளோடு வந்திருந்தபெண்கள் பலர் கையில் ஏந்திய வண்ணம் நின்றுகொண்டிருந்தார்கள். மேளக் கச்சேரியும், நாதஸ்வர இசையும் ஒலிப் பெட்டியில் கோர்வையாக முழங்க, மங்கலத் தில் தோய்ந்து களை கட்டிக் கொண்டிருந்தது மண்டபம். அழகிய மஞ்சள் நிற பட்டு மினுங் கல் சாறியோடும், நகைகளின் ஜொலிப் போடும், பூவாசனையோடும் பருவமடைந்த பெண் அந்தச் சமயத்தின் தனி அழகோடிருந் தாள்.

ஒளியில் ஜொலிக்கும் தனது பேத்தியின் அழகை ஏதோ ஒரு வகையான உறைந்த மௌனத்தில், சிலமாதங்கள்தான் இலங்கை யிலிருந்து வந்த அம்மப்பா ரசித்துச் சிரித்துக் கொண்டிருந்தார். சிறுமியின் பெற்றோர்களின் மனமோ உறவினர்கள், நண்பர்கள், அறிமுக மானவர்கள் என்று பலபேரின் அன்பின் பக் கங்கள் திறந்து அவர்களுள் புரண்டுகொண் டிருந்தது.

O O O

“பிள்ளை, இங்கு வந்ததின் பின் இந்தக் குளிருக்காக்கும் உடம்பெல்லாம் சரியான வருத்தமாக இருக்கிறது. என்ன இருந்தாலும் எங்கட ஊரில இருக்குமாப்போல சுகம்... அந்த சந்தோஷம்... நான் ஊருக்குத் திரும்பப் போறன். நான் தனிக்கட்டையெண்டாலும் என்ர மாமி, மச்சாள்மார் இருக்கிறாளவை. நீ யோசிக்காமல் என்னை அனுப்பிவிடு” என்ற தந்தையின் வேண்டுகோள் ரோகினிக்கு ஆச் சரியத்தை கொடுத்தது.

என்ன அப்பா ‘பிள்ளையின் கொண்டாட் டம் முடிந்த களை இன்னும் ஆறவில்லை. எவ் வளவு சிரமப்பட்டு உங்களை இங்கு அழைத் தோம். இப்படி அவசரப்பட்டு ஊருக்குப்போக வேண்டும் என்கிறீர்கள்? இப்படித்தானே இங்கு இருக்கும் எத்தனையோ பிள்ளைகள் தங்களுடைய அம்மா, அப்பாமார்களை ஏதோ ஒரு சாட்டை வைத்து விசாவை எடுத்து கூப் பிட்டுவிட்டு பிள்ளைகளோடு சேர்ந்து சந் தோஷமாக இருக்கினம். இப்போ உங்களுக்கு என்ன குறையெண்டு கண்டு ஊருக்கு வெளிக் கிட யோசிக்கிறியள்? லண்டனில் இல்லாத மருந்து வசதிகளே ஊரில இருக்கு...’ என்று மகள் கூறிக்கொண்டேயிருந்தாள். மறைக்க முடியாத குற்ற உணர்வு அசிங்கமாக அவர் முகத்தில் படலமிட்டிருப்பதை எவருமே அறியமாட்டார்கள்.

தனது மகளின் எந்தப் பேச்சையும் அப்பா பொருட்படுத்தவேயில்லை. கலகலத்த சிரிப் புக்கள் அவருள் கலங்கிக்கொண்டிருந்தது போல் இருந்தது... மிகவும் அவசரமாக தனது காரியத்தில் கண்ணாயிருந்து சில நாட்களில் இலங்கைக்குப் புறப்பட்டுவிட்டார் அப்பா...

O O O

சிறுமி பெரியவளாகி பெரிய கொண்டாட் டங்கள் இடம்பெற்றாலும் அந்த உணர்வே அவளுக்குக் கிடையாது. பாடசாலைத் தோழி களை காணவேண்டும்... அவர்களோடு சேர்ந்து விளையாடவேண்டும்... பேசவேண் டும... பாடசாலையில் இடம்பெறும் மேல்நாட்டு நாட்டியத்தின் தாள அடிகளைப் பழகவேண் டும்... பாடசாலையில் நடைபெறும் விழாவில் அதனை ஆடிக்காட்ட வேண்டும்... அம்மாவும் அப்பாவும் வந்து அதனைப் பார்க்கவேண்டும்...

மகளின் அழகை ரசித்த அம்மா, மகளை வருடிவிட்டு அழைத்துச் செல்கிறாள் பாட சாலைக்கு. அம்மாவின் கண்களின் மிருது வான பார்வை அவளை ஆனந்தத்தில் அடை காப்பதுபோல் இருந்தது. சின்னக் குட்டிப் பெண்ணாக இருந்த தன் ஆசை மகள் இருந் தாற்போல இவ்வளவு வளர்ந்துவிட்டாளே! அவளில் மிளிரும் விழிகள்... ஒருபோதும் கண்டிராத அவளின் கவர்ச்சி... தொலைக் காட்சியில் தான் பார்த்து மகிழும் முத்தமிடு கின்ற அழகிய பூவிதழ்கள் போன்று விரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதடுகள்... தனது கணவரின் கவர்ச்சியோடு அமைந்த அவளின் அசைவுகள்... தன்னைப் போன்ற இதமான சாயல்... தன் மகளில் பூத்துக குலுங்குவதை பாடசாலை வாசலில் நின்று அவளைப் பின்புறம் பார்த்தவாறே பரபரப்பாகி தன்னுள் சுழன்றுகொண்டிருந்தாள் அம்மா.

தினமும் தனது புத்திரி குறித்து புதுப்புது விதமான கனவின் மிதப்புக்களில் நாட்கள் நகர்ந்தன அம்மாவுக்கு.

வாரஇறுதி நாளன்று மதியம்போல் பாடசாலையில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

மிஸிஸ். ரோகினி மதிவண்ணன்..?

யேஸ் ஐ ஆம் மிஸிஸ் ரோகினி மதிவண்ணன்.

ஐ ஆம்கோலிங்ஃறொம்யுவர் டோட்டேர்ஸ் ஸகூல். யுவர் டோட்டர் இஸ் நொட் வெல். சி ஹாஸ் எ ரெம்பரேச்சர். கான் யு கம் ரு ஸ்கூல் அஸ் சூன் அஸ் பொசிபிள்?

( உங்களுடைய மகளுக்கு உடம்பு கொஞ்சம் வருத்தமாக இருக்கிறது. வழமைக்கு மாறாக அவள் காணப்படுகின்றாள். உடல் ரெம்பரேச்சரும் காணப்படுகின்றது. உடனடியாக நீங்கள் பாடசாலைக்கு வர முடியுமா? )

உடம்பு பூவாகி மலர்ந்து இன்னும் சரியான வலுவடையாத தேகம்.... சிறிது நாட்கள் ஓய்வாக வீட்டில் இருந்துவிட்டு, இன்று பாடசாலைக்குப் போனதும் துள்ளி ஓடியாடி விளையாடியிருப்பாள். உடல் நல்லா நொந்துவிட்டதுபோல்... பயமும், பதற்றமும் தாயுள்ளத்தின் மனதை வேகமாக்கி அழுத்துகிறது... மிகவும் அவசரமாக தன்னை தயார் செய்துகொண்டு பாடசாலைக்குப் புறப்படுகின்றாள் அம்மா.

பாடசாலையின் மெடிக்கல் அறையில் பெண் ஒருவர் அவள் அருகில் நின்றுகொண்டிருந்தார்.

"மிஸிஸ் ரோகினி மதிவண்ணன், சிறிது மயக்கமாகவும் இவள் காணப்படுகின்றாள். எதற்கும் இவளை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று பரிசோதிப்பது நல்லது" என்று பாடசாலையின் முதலுதவி வழங்குவதற்குப் பொறுப்பாக இருக்கும் அந்தப்பெண் கூறினாள்.

காலையில் பரவசத்தோடு பாடசாலைக்குச் சென்ற தனது மகளின் கோலத்தைக் கண்டதும்... அந்தப் பெண் அப்படிக் கூறுவதும்... அம்மாவுக்கு என்றுமில்லாதவாறு மூச்சிழைத்து களைப்பு ஏற்படுகின்றது. கண்களில் நீல ஒளி படருவதுபோலிருந்தது... மகள் ஒன்றும் பேசாது மௌனமாகவே இருந்தாள். அம்மாவின் விழிகளில் எழும் வினாக்களுக்கு அவளால் பதில் கூறத் தெரியவில்லை. இன்னும் விபரம் தெரியாத சின்னவள்தானே! அம்மாவின் தவிப்பு... அவளின் உள்ளத்தில் ஊடுருவும் நெருடல்...

வைத்தியசாலையின் அவசரப்பிரிவிற்கு அம்மா மகளை கொண்டு செல்கின்றார். லண்டனில் அவசரப்பிரிவில்தான் அதிக நேரம் காத்துக்கொண்டிருக்க வேண்டும். நீண்டு மினுமினுக்கிற கைகளால் தன்தாயை அணைத்தபடி தன்தாயின் தோளில் சாய்ந்து உறங்கி விட்டாள்.

வைத்தியரின் திடீர் அழைப்பு... விபரங்கள் எல்லாவற்றையும் பதிவு செய்துகொண்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன... நாடித் துடிப்பை பரிசோதித்த வைத்தியர். இவளுக்கு ரத்தப் பரிசோதனையும் மேற்கொள்ள வேண்டும் என்கிறார். பரிசோதனைகளை யாவும் மேற்கொண்ட பின் 'இப்போது நீங்கள் வீடு செல்லலாம். ரத்தப் பரிசோதனையின் முடிவு தெரிந்ததும் உங்களது குடும்ப வைத்தியருக்கு அறிவிப்போம்' என்றுவிட்டு விடைபெற்றார் வைத்தியர்.

அம்மாவின் முகத்தில் திகிற் புள்ளிகள் சுழன்றுகொண்டிருந்தன... எதனையும் வெளியிற் காட்டிக்கொள்ளாது 'வாம்மா' என்று தனது அழகுச் செல்வத்தை இறுகப் பற்றிக்கொண்டு அழைத்துச் செல்கிறார் வீட்டுக்கு.

எல்லோரும் தூங்கும் இரவுகளில் தன் மகளின் படுக்கையோரம் உட்கார்ந்திருந்தாள் அம்மா. தன் மகளின் உடலில் எதையோ தேடிக்கொண்டிருந்தாள் அம்மா... அவளின் உறக்கத்தில் ஊருவும் நெருடலால் விழித்துக் கொண்டேயிருந்தாள் அம்மா.

அம்மாவும் அப்பாவும் ஒரே வேலைப் பராக்குளில் ஓடித்திரிவதுண்டு. அம்மப்பா வீட்டில் துணைக்கு இருக்கிறார் தானே என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிவில் அம்மப்பாவுடன் தன் மகளை பாது காப்பாக விட்டுச் சென்று வெளிவேலை களைக் கவனித்துவிட்டு வருவதுண்டு.

"நீ பிறந்த பின்னர் உங்கட அம்மா பிள்ளை யின்ர அழகான புகைப்படங்கள்தான் அனுப்பு வாள். எவ்வளவு அழகாக இருந்தாய் குஞ்சு. நான் ஆசையில உன் புகைப்படத்துக்குத்தான் எப்பவும் முத்தம் கொடுப்பதுண்டு. நான் இப் படி என்னுடைய பேத்தியை நேராக வந்து பார்த்துக் கொஞ்சுவேன் என்று எதிர்பார்க்க வில்லை.... எங்கே அம்மப்பாவுக்கு ஒரு முத் தம் தாங்கோ" என்று அவள் இடுப்பைத் திமிற திமிற இழுத்து மடியில் வைத்துக் கொஞ்சு வதுண்டு அம்மப்பா... சிலவேளைகளில் மூச்சு அனலாய்ப் பறப்பதுண்டு அம்மப்பாவுக்கு...

ஒருநாள் நண்பர் ஒருவரின் மகளின் அரங் கேற்றத்திற்கு அம்மாவும் அப்பாவும் செல்ல வேண்டியிருந்தது. அம்மப்பாவோடு பத்திர மாக இருக்க வேண்டும்! அம்மாவின் அன்புக் கட்டளை!

தொலைக்காட்சியில் வரும் சிறுவர் நிகழ்ச்சிகளை பார்ப்பதில் மூழ்கிப்போயிருக் கிறாள் சிறுமி. தனது உடலில் விழிகள் பல மொய்த்து உறுத்துவதுபோல உணர்ந்தாள்... நரை முடிகள் நிறைந்த உடலில் அவள் முகம் நெருக்கப்படுகின்றது. தளிர் விட்ட உடம்பை கரடுமுரடான கறுத்த கைகள் தடவுகின் றன.... இள மார்பகங்கள்... அவள் கன்னங் கள்.... உதட்டில் என்று முத்தங்கள்.... வலு வான இறுக்கத்தில் அசிங்கமான கிழட்டுக் காமத்தின் புகைச்சல்... கோபமாகக் கத்திய பிள்ளை உறங்கிவிட்டாள்....

அந்நிகழ்வை சிறுமிக்கு எவருக்கும் சொல லத் தெரியவில்லைப்போல்....

காலையின் வாகன ஒலிகள். விழித்தபடியே படுத்திருந்த அம்மா. பெற்சீற்றை விலத்திவிட் டுப் தன் மகளைப் பார்க்கிறாள். ஐயையோ! இந்த மாதிரி மேல் கொதிக்கிறதே. மருந்துப் பெட்டியிலிருந்து காய்ச்சல் மருந்து எடுக்கப் போகின்றாள் அம்மா.

தொலைபேசி மணி அடித்துக் கொண்டது.

மெடிக்கல் சென்ரரிலிருந்து பெண் அழைக்கின்றாள்.

"உங்கள் மகள் விடயமாக உங்களுட்ன் டொக்டர் அவசரமாக கதைக்க விரும்புகிறார். காலை பத்து மணிக்கு உங்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. மகளுடன் உடன் வாருங்கள் மிஸிஸ் ரோகினி மதிவண்ணன்"

"மிஸிஸ் ரோகினி மதிவண்ணன். அப்செற் ஆகவேண்டாம். மனதைத் திடமாக்கிக் கொள்ளுங்கள். உங்களது மகளின் ரத்தப் பரிசோதனையில்....

உங்கள் மகள்... ஐ ஆம் வெறி சொறி ரு சே.... ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

என்ன டொக்டர்.....

உங்களின் சிறு பிள்ளை கர்ப்பமுற்று இருக் கின்றாள்...

எப்படி டொக்டர்..? இருதயம் பலமாகக் குலுங்கி இடித்தது.... ஆ... இது என்ன தெய் வமே! எனது ஒரே ஒரு செல்வக் குழந்தை. அப்படி இருக்கவே முடியாது... இப்போதானே அவள் வயதுக்கு வந்தவள்... ஒன்றுமே புரியாத குழந்தை டாக்டர்... ஐயோ இது என்ன கொடுமையான செய்தியைக் கூறுகின்றீர்கள் டொக்டர்...

மீட்க முடியாத சோகத்தில் அம்மாவின் மனம் கேவி கண்களில் நீர் கோர்த்துக் கொண்டே இருந்தது...

எதுவுமே பேச முடியாத இயலாமையில் அம்மாவின் தலை விறைத்தது. அவளின் உடல் கழன்று உருண்டு போனதுபோலிருந் தது. இருதயம் உலர்ந்து சருகாகி நொருங் கியது. இதனை அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.... அவளின் உடல் எடையற்று வெறுமையாக மாறிக்கொண்டிருந்தது....

**(உண்மைச் சம்பவத்தைத் தழுவியது)**


## வேண்டுகின்றாம்!

தாயக மண்ணின் தனித்துவம்
காக்கும் 'இணுவில் ஒலி'யின்
வளர்ச்சிக்கு ஆதரவு நல்கும்
வண்ணம் அன்புள்ளங்களையும்,
புலம்பெயர்ந்து வாழும்
எம் உறவுகளையும் அன்புடன்
வேண்டுகின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "இணுவில் ஒலி" சஞ்சிகை நடத்திய கட்டுரைப்போட்டி - 2013 பரிசுபெறுவோர்

### கீழ்ப்பிரிவு

01. **முதலாமிடம் :** செல்வன் மீனாசுந்தரம் அபிஷேக்
(கொழும்பு விவேகானந்தா தேசிய கல்லூரி)
02. **இரண்டாமிடம் :** செல்வன் உதயகாந்தன் லனீஸ்
(மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தியாலயம்)
03. **மூன்றாமிடம் :** செல்வன் சிங்கராசா சசிவர்ணன்
(வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)

### சிறப்புப் பரிசு பெறுவோர்

01. செல்வன் செயறூபன் சாயீசன்
(வவுனியா விபுலானந்தாக் கல்லூரி)
02. செல்வன் சு.பரத்ராஜ்
(யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்)
03. செல்வி பா.கலைப்பிரியா
(யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்)
04. செல்வி பாஸியா வாஷீர்
(களுத்துறை முஸ்லிம் பாலிகா ம.வி.)
05. செல்வி. K. சினேகா
(நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி)
06. செல்வி பஹ்மா பஸால்
(களுத்துறை முஸ்லிம் பாலிகா ம.வி.)
07. செல்வி M.N.F. நஸ்ஸாத்
(களுத்துறை முஸ்லிம் பாலிகா ம.வி.)
08. செல்வி.ஏ.பிருந்தியா
(யா/தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி., சுழிபுரம்)
09. செல்வன் சிவகுமார் தசாந்தன்
(ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரி)
10. செல்வி.எம்.என்.பாத்திமா ஷிம்றா
(சம்மாந்துறை அல்.முனீர் வித்தியாலயம்)

### மத்தியபிரிவு

01. **முதலாமிடம்** செல்வன் யோ.வினோசன்
(யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)
02. **இரண்டாமிடம் :** செல்வி அர்வனா சிவபாக்கியநாதன்
(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)
03. **மூன்றாமிடம் :** செல்வி சோபனா சிவானந்தம்
(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

### சிறப்புப் பரிசு பெறுவோர்

01. செல்வன் ர.ஜானுஷன்
(யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி)
02. செல்வி.பிரியதர்சனா பிரதீபன்
(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)
03. செல்வன் எஸ்.கஜானனன்
(யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)
04. செல்வி. கௌசல்யா தேவராஜ்
(நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி)
05. செல்வி.பி.தரன்சிகா
(வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்)
06. செல்வி மதுவந்தி மகேந்திரராஜா
(யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)
07. செல்வன் கண்ணன் டெபோறா
(யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)
08. செல்வி சங்கவி தயானந்தன்
(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)
09. செல்வி த. திலக்ஷிகா
(யா/தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி., சுழிபுரம்)
10. செல்வன் வ.நிக்ஸ்மன்
(யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)
11. செல்வி க.கேனுயா
(யா/மயிலணி சைவ ம.வி., சுன்னாகம்)
12. செல்வி பிரியாதக்ஷி சூரியமூர்த்தி
(யா/மெதடிஸ்த பெண்கள் உயதரப் பாடசாலை, பருத்தித்துறை.)

### மேற்பிரிவு

01. **முதலிடம் :** செல்வி ஹம்ஷாளினி சிறீதரன்
(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)
02. **இரண்டாமிடம் :** செல்வி M.M.H.F.மபாஸா
(களு/முஸ்லிம் பாலிகா ம.வி., களுத்துறை)
03. **மூன்றாமிடம் :** செல்வி உ.சுதர்சனா
(நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி)

### சிறப்புப் பரிசு பெறுவோர்

01. செல்வன் மரியநாயகம் கேசவன்
(கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி)
02. செல்வி சரணியா சிவச்சந்திரன்
(நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி)
03. செல்வி அஜிதா கணேஷ்
(யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி)
04. செல்வி சிவரூபினி விஸ்வநாதன்
(கொ/விவேகானந்தா கல்லூரி)
05. செல்வி கோபிகா உத்தரதாசன்
(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)
06. செல்வன் S.F.ஸ்பரா
(இ/அல் மக்கியா ம.ம.வி., இரத்தினபுரி)
07. செல்வன் தட்சணாமூர்த்தி முகுந்தன்
(மட்டு/துறை நீலாவணை ம.வி.
08. செல்வி A.F.அல்கா
(க/மடீனா மத்திய கல்லூரி, மடவளைபசார்)
09. செல்வன் த.தனுஜன்
(வ/கனகராயன்குளம் ம.வி.)
10. செல்வி ம.மதுமதி
(கல்/இராமக்கிருஷ்ண ம.வி., கல்முனை)
11. செல்வி லக்ஷனா ஸ்ரீ ரங்கநாதன்
(யா/வயாவிள்ளான் ம.ம.வி.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தகால விழாவும் சிறுவர் விளையாட்டுப் போட்டியும்

ஐக்கிய இராச்சிய இணுவில் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற வசந்தகால விழாவும் சிறுவர் விளையாட்டுப் போட்டியும் மிகக் கோலாகலமாக 29.06.2013 அன்று சவுத் ஒல் வார்றென் பாம் ஸ்போட்ஸ் சென்ரரில் (SOUTH ALL WARREN FARM SPORTS CENTRE) நடைபெற்று முடிந்துள்ளது.

ஐக்கிய இராச்சியத்தில் 2002 இல் ஆரம்பிக்கப்பட்ட இணுவில் ஒன்றியம், கடந்த காலங்களில் வருடாவருடம் ஒன்றுகூடல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடத்தி வந்துள்ளது. இவ்வருடம் முதன் முதலாக வசந்தகால விழாவும சிறுவர் விளையாட்டுப் போட்டியும் இடம்பெற்றமை சிறப்பு அம்சமாகும். ஐக்கிய இராச்சியத்தின் பல பகுதியிலிருந்தும் இணுவில் மண்ணின் மக்கள் பெருமளவில் குடும்பத்தினருடன் வருகை தந்து விழாவில் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.

விழாவின் பிரதம அதிதியாக பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் உயர்திரு சர்மா அவர்களும், சிறப்பதிதிகளாக திருவாளர்கள் குகவரதன் (தொழிலதிபர்), மனோகரன் (தொழிலதிபர்), தம்புசிவா (இணுவில் ஒலி ஆசிரியர்) ஆகியோர் வருகை தந்து சிறப்பித்தனர். மேலும் இணுவில் ஒன்றியத்தின் மூத்த உறுப்பினர்களாகிய திருவாளர்கள் பொ.பஞ்சாட்சரம், சி.அமிர்தலிங்கம் ஆகியோரும் பங்குகொண்டிருந்தனர்.

கொடியேற்றல் நிகழ்வில், ஐக்கிய இராச்சியத்தின் கொடியினை பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் உயர்திரு சர்மா அவர்கள் ஏற்றி வைத்து விழாவை ஆரம்பித்து வைத்தார். இணுவில் ஒன்றியத்தின் கொடியினை திரு. குகவரதன் ஏற்றி வைத்தார். விளையாட்டுப் போட்டியில் பெருந்தொகையான சிறுவர்களும் இளைஞர்களும் பங்கேற்றனர். உதைபந்தாட்டம், கிரிக்கெட, கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல் மற்றும் ஓட்டப் போட்டிகளும் இடம்பெற்றன. வெற்றி பெற்றவர்களுக்குப் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

விசேடமாக அமைக்கப்பட்ட இணுவில் ஒன்றியத்தின் விற்பனை நிலையத்தில் சுடச்சுட சுவைமிக்க பல வகையான உணவு வகைகள் (வடை, றோல், கொத்து றொட்டி, சூழ், கடல் உணவு வகைகள் மற்றும் ஐஸ்கிறீம், பலூடா, குளிர் பானங்கள்) விற்பனை செய்யப்பட்டன. காலை 10 மணிக்குத் தொடங்கிய வசந்தகால விழா இரவு 9 மணியளவில் நிறைவுபெற்றது. தொடர்ந்து வருடாவருடம் இதேமாதிரியான விழாவை, ஐரோப்பிய நாடுகளில் வாழும் எமது மண்ணின் மக்களுடன் இணைந்து பெரியளவில் நடத்த எண்ணியுள்ளதாக இணுவில் ஒன்றியத்தின் செயலாளர் சபேசன் சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

# அனாமிகா அஞ்சலியும் கலை இலக்கிய சங்கம நிகழ்வும்

இலண்டனில் வதியும் முன்னாள் கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பாலசுகுமாரின் பெரும் முயற்சியினால் மறைந்த மகள் அனாமிகாவின் ஞாபகார்த்தமாக கலை இலக்கிய சங்கம நிகழ்வு, லண்டன் வூல்விச் லோட்டஸ் கிளப் அரங்கில் 30.06.2013 அன்று நடைபெற்றது. ஆய்வரங்கு, ஓவியக் கண்காட்சி, நூல்கள் வெளியீடு, ஈழநாட்டிய ஆற்றுகை ஆகிய நிகழ்ச்சிகள் காலை 10 மணி முதல் மாலை 9.30 மணி வரை இடம் பெற்றன.

ஓவியக் கலைஞர் அருந்ததியின் ஓவியங்கள் பல அழகான முறையில் காட்சிப்படுத்தப்பட் டன. காலை சுவாமி விபுலானந்தர் அரங்கில் ஆய்வரங்கும், மாலையில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அரங்கில் நூல் வெளியீடும், ஆற்றுகைகளும் நடைபெற்றன. விழா அரங்கில் பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர் கா.சிவத்தம்பி ஆகியோரின் படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. பாலசுகுமாரினால் எழுதப்பட்டு அனாமிகா பதிப்பக வெளியீடாக வெளிவந்த 'ஈழநாட்டியம்', 'ஈழத்தமிழர் மரபான இசையும் நடனமும்', 'THE TRADITIONAL MUSIC AND DANCE OF THE EELAM TAMILS' என்பவற்றுடன் 'தம்பலகாமம் பற்று' (வரலாற்று பண்பாட்டு இலக்கியத் தொகுப்பு), 'கரைகள் கடந்து' (பேராசிரியர் கா.சிவத்தம்பி பற்றிய கட்டுரைத் தொகுப்பு) ஆகிய ஐந்து நூல்கள் ஒரே மேடையில் வெளியிட்டு வைக்கப்பட்டன. ஆற்றுகை நிகழ்ச்சியாக 'கண்ணகி குளிர்த்தி', ஈழத்தமிழர் இசை மரபு (பாகம் -1) பாடல்கள் ஒலிக்க, நாட்டார் பாடல்களாக இரண்டு இறுவட்டுக்களும் வெளியிடப்பட்டன. புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் எம்மவர்கள் எமது மொழி, கலை இலக்கியங்களை வளர்த்து வருகின்றமை மகிழ்ச்சி தரும் விடயமாகும். அந்த வகையில் பாலசுகுமாரின் முயற்சி பெருமை கொள்ள வைத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் விருந்து



## ஆற்றலின் வெளிப்பாட்டுக்கு...

புதுப்பொலிவுடன் வீறு நடை போடும் 'இணுவில் ஒலி' வாசகர் மனங்களைக் கொள்ளை கொண்டு நிற்கிறது. 'இணுவில் ஒலியின் ஐந்தாவது இதழின் அட்டைப்படம் இந்தியாவின் பிரபல ஓவியர் மாருதியின் கைவண்ணத்தில் கலையம்சம் கொண்டதாக அமைந்திருப்பது சிறப்பு. "சித்திரையாள் வந்தாள் சிறப்புகள் பல தந்தாள்" என்ற சொல் வடிவம் அட்டைப் படத்துக்கு மெருகூட்டி நிற்கின்றது. அருமையான பல அம்சங்கள் அடங்கிய பொக்கிஷமாக இணுவில் ஒலி இருப்ப தென்பது உண்மை. 'படைப்பிலக்கியத்தின் நோக்கம் : ஒரு பார்வை' என்னும் கட்டுரை இளம் எழுத்தாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றது. இணுவில் உத்திரனின் 'எது அழகு?' என்றும் சிறுகதை புதுமைச் சிந்தனையின் வெளிப்பாடாகத் தோற்றம் பெற்றுள்ளது. இலங்கையும் உயர்கல்வியும் : ஒரு நோக்கு – கல்வியின் பலபரிமாணங்களை தெளிவாக விளக் கிக் கூறுகின்றது. மேலும் அறிவுக்கு விருந்தாக பல புதிய அம்சங்களுடன் இணுவில் ஒலி மணம் பரப்பி தன் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளது.

**வேலு பரமானந்தன்**
*கிளிநொச்சி.*

---

## அறிவுக்கு விருந்து!

அழகு மயிலாளின் அலங்காரத் தோற்றம் அட்டைக்கு மெருகூட்ட..... 'சித்திரையாள் வந்தாள்; சிறப்புகள் பல தந்தாள்' என்னும் அமுத வாக்குகளுடன் 'இணுவில் ஒலி' ஐந்தாவது இதழ் வெளிவந்துள்ளது. பேனா முனையில் ஆசிரியர் மனிதநேயப் பண்பை வலியுறுத்தியுள்ளமை இன்றைய காலகட்டத்தின் முக்கிய தேவையாக உள்ளது. சாவகச்சேரியுடன் தொடர்புள்ள ஆசிரியர் சபா ஆனந்தர், பேராசிரியர் கோபன் மகாதேவா ஆகியோரைப் பற்றிய பதிவுகள் எனக்கு உற்சாகத்தைத் தந்துள்ளன. 'குழந்தைகளை வளர்ப்பதில் பெற்றோரின் பங்கு' என்னும் கட்டுரை என்போன்ற பெற்றோருக்கு நல்ல படிப்பினையாக அமைந்துள்ளது. மேலும் அறிவுக்கு விருந்தா கும் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டமை அருமையிலும் அருமை. இணுவில் ஒலியில் வெளி வரும் எல்லா அம்சங்களையும் நோக்கும்போது அதன் தனித்துவம் தெரிகிறது. மாணவர்களுக் குக் களம் அமைத்துக்கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்தும் பணி வரவேற்கத்தக்கது. நிறைவுடன் வெளிவரும் இணுவில் ஒலியின் இலக்கியப் பணி தொடர என் நல்வாழ்த்துக்கள் நன்றி .

**சக்தி விமலச்சந்திரன்**
*சாவகச்சேரி.*

---

## எழில்மிகு இணுவில் ஒலி

'சித்திரையாள் வந்தாள்; சிறப்புகள் பல தந்தாள்' என்ற தலைப்புடன் தமிழகத்தின் பிரபல ஓவியர் மாருதியின் கைவண்ணத்தில் மிளிர்கின்ற அழகிய அட்டைப் படத்துடன் இரு திங்கள் ஏடான இணுவில் ஒலி (5) வெளிவந்துள்ளது.

பாசம், மனிதநேயம் பற்றி ஆசிரியர் தம்பு சிவா தீட்டியுள்ள ஆசிரியத் தலையங்கம் உள்ளத்தைத் தொடுகிறது.

இலண்டன் பேராசிரியர் கோபன் மகாதேவா எழுதிய 'நானறிந்த நல்லாசான் இணுவை ஆனந்தர்' கட்டுரையும் 'இணுவில் சைவ மகாஜனாவின் ஆளுமை மிக்க அதிபர்' கட்டுரையும் இணுவையூரின் தலைசிறந்த இரண்டு அறிஞர் பெருமக்களின் பெருமைகளை விளக்குகின்றன. கலாபூஷணம் வைத்தீஸ்வரனின் 'குழந்தைகளை வளர்ப்பதில் பெற்றேரின் பங்கு', த.சிவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திலனின் 'படைப்பிலக்கியத்தின் நோக்கம்', திருமதி சகலகலாவாணி தேவகரனின் 'இளைய தலைமுறையினரின் கல்வி நிலை ஒரு நோக்கு' போன்ற கட்டுரைகள் வாசித்துப் பயன் பெறக் கூடியவை; சிந்தனைக்குரியவை!

மேலும் 'ஓய்வறியா உழைப்பினனாகி ஓய்வுபெறும் அதிபர் சதானந்தன்' என்ற தலைப்பில் ஓய்வுபெறும் இணுவில் மத்திய கல்லூரி அதிபர் அ.சதானந்தன் பற்றிய கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் எழுதியுள்ள கட்டுரை அதிபர் பற்றி மாத்திரம் குறிப்பிடாது கல்லூரியைப் பற்றிய விவரங்களும் உள்ளடக்கியுள்ளமை சிறப்பானது.

தவிர, இணுவில் உத்திரனின் 'எது அழகு?' என்ற சிறுகதை, வேல் அமுதனின் 'அம்மா' குறுங்கதை, இணுவையூர் இலட்சுமிபுத்திரனின் 'இங்கிதங்கள் தரும் இணுவில்' கவிதை, நூல் ஆய்வு, மாணவர் உலகம் போன்றவை இணுவில் ஒலிக்கு ஒளியூட்டுகின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக ஏனையவை பகுதியில் இடம்பெற்றுள்ள தலைசிறந்த சமதர்ம வாதி, அறிவு எனும் பொக்கிஷம், உழவர் பெருமை, மன்னர்களை மக்களாக்கிய காப்பியங்கள், யாழ்.இராமநாதன் கல்லூரி போன்ற அம்சங்கள் சுவையாக உள்ளன.

ஆக மொத்தத்தில் இம்முறை இணுவில் ஒலி இனிக்கிறது.!

**ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன்,**
**வெள்ளவத்தை.**

# ஈழத்துச் சிறுவர் இலக்கியம் – ஓர் அவதானிப்பு


சிறுவர் இலக்கியம் என்றால் என்ன? சிறுவர் எழுதும் இலக்கியமா? சிறுவர் களுக்காக முதியோர் தங்கள் நிலையில் இருந்து எழுதுவதா? அல்லது தங்கள் நிலையில் இருந்து கொண்டு உபதேசிப்பது போல் கூறுவதா? அல்லது சிறுவர் களாக முதியவர்கள் உளரீதியில் மாறி எழுதுவதா? என்ற கேள்விகள் எழுந்து நிற்கின்றன. மழலைகள், குழந்தைகள், பிள்ளைகள், கட்டிளம் வயதினர் எல் லோரும் சிறுவர்கள் என்ற பதத்திற்குள் அடங்குவர். இவ்வகை உட்பிரிவுகளைக் கொண்டவர்களின் தரத்திற்கேற்ப ஆக்கப்படுபவை சிறுவர் இலக்கியங் களாகும். பேராசிரியர் செ.யோகராசா சிறுவர் இலக்கியம் பற்றிக் குறிப்பிடுகை யில், "சிறுவர் இலக்கியங்கள் எவ்வகையைச் சார்ந்தவையாக இருந்தாலும் சிறு வர் உளவியலுக்கு ஏற்ப ஆக்கப்படவேண்டும். அதேவேளை சிறுவர் இலக்கியம் படைப்போர் ஓரளவுக்காவது உளவியல் அறிவு பெற்றிருக்க வேண்டும்" என்றும் உரைக்கின்றார்.

சிறுவர் இலக்கியம் யாருக்காக எழுதப்படுகின்றது? அந்தச் சிறுவர்களின் வயதினை நோக்க வேண்டும். சூழலை நோக்க வேண்டும். அவர்களது மொழி யறிவை நோக்கவேண்டும். சமூகச் சூழலை நோக்கவேண்டும். அது மாத்திர மன்றி அவர்களின் நிலைக்கு படைப்பாளி இறங்க வேண்டும். காலம் மாறுகின் றது. கல்விக் கொள்கைகள் மாறுகின்றன. உளவியலும் விருத்தியடைகின்றது. மாறும் சமுதாயத்தில் நாங்களும் மாறாதிருக்க முடியாது. பழங்கதை பேசி காலத்தை வீணடிக்காது புதுமையைக் காணுவோம். சிறுவர்களால் நேசிக் கப்படும் படைப்புக்களை படைக்க முயல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டிய மயில் - 2012



இணுவில் கிழக்கு திரு திருமதி நிர்மலாதேவி கணேச லிங்கம் தம்பதியரின் செல்வப் புதல்வன் செல்வன் கணேச லிங்கம் பவன் 'ஈயூலங்கா போரம்' நிறுவனத்தால் நடத்தப் பட்ட 'நாட்டிய மயில் 2012' போட்டியில் கலந்துகொண்டு மூன்று சுற்றுக்களாக நடைபெற்ற போட்டி யில் 19 மாண வர்களுள் முதலாவது இடத் தினைப் பெற்று தனது சொந்த மண் வாசனையை நிரூபித்து எமது நிறுவனத்துக்கும் பெரும் சேர்த்துள்ளார். இவர் சிறு வயது முதல் எமது இணுவையூர் குமரநர்தனாலயத்தில் கலையைப் பயில ஆரம் பித்தவர்.

நடனக் கலையை தனது மனவிருப்பத்துடன் அவர் கற்றமையால் இன்று ஒரு சிறந்த நடனக் கலைஞராக வெளி உலகுக்கு அவர் பெயர் தெரிகின்றது. வட இலங்கை சங்கீத சபை நடத்துகின்ற பரதநாட்டியப் பரீட் சையில் தரம் 1 முதல் 5 வரை சித்தி எய்தி ஆசிரிய தரப் பரீட்சைக்குத் தன்னை முழுமையாக பயிற்சியில் ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றார். தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் சாந்த குணமும் கொண்ட எனது சிரேஷ்ட மாணவன், எமது மன்றத்தின் வளர்சிக்காக என் னோடு அயராது பாடுபட்டுவரும் ஓர் இளம் கலைஞர். இன்று எமது மன்றத்தால் நடத்தப்படுகின்ற கலை நிகழ்வுகள் அனைத்தில் தனது கால்பதித்துள்ளார்.

இவர் தனது திறமைகளை பாடசாலையிலும் காட்டியுள்ளார். 2009 ஆண்டு நடைபெற்ற தமிழ்மொழித் திறன் போட்டியில் அகில இலங்கை ரீதியில் பிரிவு 5 தனி நடனப் போட்டியிலும் குழு நடனப் போட்டியிலும் பங்குபற்றி முதலாம் இடங்களைப் பெற்று எமது மன்றத்துக்குப் பெருமை சேர்த்த ஒரு இளங்கலைஞன் நாட்டிய மயில் போட்டி ஆரம்பிக்கப்பட்ட சில ஆண்டுகளில் ஒரு நாட்டிய மயில் ஆண் என்றால் அது எமது மன்ற மாணவன் செல்வன் கணேசலிங்கம் பவன்தான் என்று கூறுகையில் பூரிப்படைகின்றோம்.

இவர் தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் முதலாம் ஆண்டு மாணவனாக கற்று வருகின்றார் சில ஆண்டுகளில் நுண்கலைமாணி என்ற பட்டத்தை சுவீகரித்து, மேலும் பல பல பட்டங்களைப் பெற்று தனது சொந்த மண்ணிற்கு தான் தவழ்ந்த கலை மன்றத்திற்கும் பெருமை சேர்க்க எல்லாம் வல்ல ஆடல் வல்லானின் தாழ் பணிந்து விடைபெறுகின்றேன்.

**திரு. நடராசா குமரவேள்**

### 'இணுவில் ஒலி' கட்டுரைப் போட்டி விருது வழங்கல்

'இணுவில் ஒலி' சஞ்சிகையின் ஓராண்டு நிறைவு விழா நடைபெறும் போது கட்டுரைப் போட்டியில் பரிசுபெற்றவர்களுக்கான விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். அதற்கான முன்னறிவித்தல் உரிய காலத்தில் பாடசாலை அதிபர்களின் ஊடாக பரிசுபெற்ற மாணவர்களுக்கு அறிவிக்கப்படும்.

**- ஆசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எயிட்ஸ் நோயைத் தடுக்க டென்மார்க் விஞ்ஞானிகள் முயற்சி

பயங்கர ஆட்கொல்லி எயிட்ஸ் நோயை உண்டாக்கும் எச்.ஐ.வி. வைரஸை நிரந்தரமாக அழித்துவிடுவதற்கான புதியதும் மலிவானதுமான தொழில்நுட்பத்தை டென்மார்க் ஆராய்ச்சியாளர்கள் சில மாதங்களுக்குள் வெளியிடுவதாக அறிவித்துள்ளனர். மனித மரபணுக் கலங்களில் இந்த வைரஸ் உருவாகி இருக்கும்போது அதிலிருந்து அவற்றை விடுவிக்கும் தொழில்நுட்பத்தை விஞ்ஞானிகள் கையாண்டு வருகின்றனர். தேங்கிக் கிடக்கும் எச்.ஐ.வி. வைரஸ்களை கலங்களின் மேற்புறத்துக்குக் கொண்டு வரும்போது உடலில் இயற்கையாகவுள்ள நோய் எதிர்ப்புச் சக்தியானது அந்த வைரஸ்களை அழித்துவிடும். தடுப்பூசி மூலம் நோய்எதிர்ப்புச் சக்தியை உடலில் அதிகரிக்கச் செய்யலாம்.

இந்தப் புதிய தொழில்நுட்பம் வெற்றிகரமானது என்று சில மாதங்களுக்கு முன் நிரூபிக்கப்பட்டுள்ளது. இம்முறையை மனிதர்களில் பரிசோதித்துப் பார்ப்பதற்கான ஆய்வினை மேற்கொள்ள டென்மார்க் விஞ்ஞானிகள் குழுவுக்கு 1.5 மில்லியன் பவுண்களை டென்மார்க் ஆராய்ச்சிப் பேரவை வழங்கியுள்ளது. அந்த வகையில் தமது சிகிச்சையை மனிதர்களில் பரீட்சித்துப் பார்க்கும் நடவடிக்கையில் விஞ்ஞானிகள் தற்பொழுது ஈடுபட்டுள்ளனர். இந் நடவடிக்கை செயற்பாட்டுத் திறனுடையது என்பதை நிரூபிக்க முடியும் என அவர்கள் நம்புகின்றனர்.

எச்.ஐ.வி. வைரஸ்களின் தேக்கங்களை விடுவிப்பது வெற்றிகரமானதென்பது அநேகமாக உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. என்று டென்மார்க்கிலுள்ள ஆர்ஹஸ் பல்கலைக்கழக மருத்துவமனையின் சிரேஷ்ட ஆய்வாளரான டாக்டர் ஒலே சொக்சாரட் தெரிவித்துள்ளார். நோயாளர்களின் நோய் எதிர்ப்புச் சக்தியானது வைரஸை உள்வாங்கி அதனை அழித்துவிடுவதே இங்குள்ள சவாலாகும். ஒவ்வொரு தனிப்பட்டவரின் நோய் எதிர்ப்புச் சக்தியின் வலுவிலேயே இதன் செயல் தங்கியுள்ளது என்று அவர் கூறியுள்ளார். எச்.ஐ.வி. வைரஸை அழித்துவிடுவதற்குரிய பரிசோதனைகள் பதினைந்துக்கும் மேற்பட்ட நோயாளர்களிடம் மேற்கொள்ளப்படுகின்றது. இவர்கள் குணமாக்கப்பட்டால் இப்பரிசோதனை பரந்த அளவில் மேற்கொள்ளப்படும் என்று த ரெலிகிராம்' பத்திரிகை தெரிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'இணுவில் ஒலி' சஞ்சிகையின் வளர்ச்சிக்கு ஆதரவு நல்கிய நல்லுள்ளங்களை வாழ்த்தி வணங்குகிறோம்

| | | |
|---|---|---|
| திரு S.P நடராஜா | - | அண்ணா தொழிலக அதிபர் |
| திரு R.மயூரநாதன் | - | தொழில் அதிபர் |
| திரு இ.கைலாயபிள்ளை | - | தொழில் அதிபர் |
| திரு அ.பற்குணன் | - | தொழில் அதிபர் |
| திரு R.சற்குருநாதன் | - | தொழில் அதிபர் |
| திரு P.N.கண்ணதாசன் | - | தொழில் அதிபர் |
| திரு T.கந்தசாமி | - | தொழில் அதிபர் |
| திரு A.லோகேஸ்வரன் | - | தொழில் அதிபர் |
| திரு T.புஸ்கரன் | - | தொழில் அதிபர் |
| திரு வை.சிவகுமாரன் | - | தொழில் அதிபர் |
| திரு A.M.சுப்பிரமணியம் | - | தொழில் அதிபர் |
| திரு. ராஜு பாஸ்கரன் | - | தொழில் அதிபர் |
| திரு V.சற்குணம் | - | தொழில் அதிபர் |
| திரு. சதபூ பத்மசீலன் | - | தொழில் அதிபர் |
| திரு V. கணேசன் | - | தொழில் அதிபர் |
| திரு. செல்வ திருச்செல்வன் | - | தொழில் அதிபர் |
| திரு.R.பாலசுப்பிரமணியம் | - | தொழில் அதிபர் |
| திரு பூ.ஸ்ரீதர்சிங் | - | தொழில் அதிபர் |
| திரு வே.சிவசுந்தரம் (லண்டன்) | - | தொழில் அதிபர் |
| திரு எஸ்.கிருபாமூர்த்தி | - | தொழில் அதிபர் |
| புரவலர் ஹாஷிம் உமர் | - | பொதுநல சேவையாளர் |
| பேராசிரியர் சபா ஜெயராசா | - | இலக்கியப் புலமையாளர் |
| திரு K.M.தர்மராசா | - | சட்ட ஆலோசகர் |
| டாக்டர் A.L.K தாஷிம் | - | இலக்கிய புரவலர் |
| திரு ந.வித்தியாதரன் | - | பத்திரிகையாளர் |
| திரு.வவுனியூர் இரா உதயணன் | - | இலக்கியப் புரவலர் |
| சைவப்புலவர் சு.செல்லத்துரை | - | தமிழ்ப் புலமையாளர் |
| திரு சி.அமிர்தலிங்கம் (லண்டன்) | - | ஊக்குவிப்பாளர் |
| திரு என்.கருணை ஆனந்தன் | - | வரி ஆலோசகர் |
| திரு.என். கணேசலிங்கம் | - | இலக்கிய ஆசான் |
| திரு.சி.சிவலோகநாதன் | - | கணக்காய்வாளர் |
| திரு.இரகுபதி பாலஸ்ரீதரன் | - | இலக்கிய ஆர்வலர் |
| திரு மா.பாலசிங்கம் | - | திறனாய்வாளர் |
| திரு வே.பிரேமகுமார் | - | ஊக்குவிப்பாளர் |
| திருமதி. சாந்தினி சிவநேசன் | - | நடனக்கலை ஆசான் |
| திரு மூ. சிவலிங்கம் | - | இலக்கிய ஆர்வலர் |
| திரு.கா.வைத்தீஸ்வரன் | - | உளவள ஆலோசகர் |
| திரு T. சிவஞானரஞ்சன் | - | ஊக்குவிப்பாளர் |
| திருமதி. க.கிருஸ்ணபிள்ளை | - | கல்வி அதிபர் |
| திருமதி வை.கணேசபிள்ளை | - | இலக்கிய ஆர்வலர் |

இவர்களுடன் அன்பளிப்பு வழங்கிய பெருந்தகைகளுக்கும், சந்தாதாரராக இணைந்து ஆதரவு நல்குபவர்களுக்கும், சஞ்சிகை பற்றிய விமர்சனங்களை அவ்வப்போது வழங்குபவர்களுக்கும், தினக்குரல், வீரகேசரி, சுடர்ஒளி, தினகரன், உதயன், வலம்புரி, யாழ் - தினக்குரல் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் குழாமுக்கும் இணுவில் ஒலி தனது நல்வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

**"நன்றி மறப்பது நன்றன்று"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ACCESS TUTORS ACADEMY



பிள்ளைகளின்
தரமான கல்விக்காகவும்
சிறந்த பெறுபேறுகளைப்
பெறுவதற்காகவும்
ஆரம்பிக்கப்படும்
புதிய கல்வி நிறுவனம்

## GCE (A/L) (ALL EXAM BOARDS IN UK)
## GCE (O/L)
## 11+ TO YEAR 10

உங்கள் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யும் நோக்கில் LONDON மாநகரில்
2013/2014 புதிய கல்வி ஆண்டில் புரட்டாதி (September) மாதம்
இக்கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்படவுள்ளது.
LONDON மாநகரில் பிரசித்திபெற்ற, தொடர்ந்து முன்னிலை வகிக்கும்
ஆசிரியர்களால் சகல பாடங்களும் கற்பிக்கப்படும்.

## ACCESS TUTORS ACADEMY
இரு இடங்களில்

| | |
|---|---|
| *CHESSINGTON BUSINESS CENTRE*<br>*COX LANE*<br>*CHESSINGTON*<br>*KT 9 1 SD* | *272 MITCHAM ROAD*<br>*TOOTING*<br>*LONDON*<br>*SW 17 9NT* |

**TEL : 0203 0200 035**

*EMAIL : info@accesstutors.co.uk*

மேலதிக விவரங்களுக்கு

| UTHAYANAN | ASOGAN | THAS | YOGA |
|---|---|---|---|
| 07747794358 | 07968178698 | 07956317920 | 07956481569 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org